ஜநவிநோதிநீ.

இல. 12.] டிசம்பர் மீ 1888. [புஸ்த. XIX.

புகழ்ச்சிவிருப்பு.

நம்முடைய குணங்களைப்பற்றியும் செய்கைகளைப்பற்றியும் பிறர் புகழவேண்டுமென்னும் எண்ணம் உலகப்பற்றுள்ள நம் ஒவ்வொருவருக்கும் உண்டு. அது மானிட இயற்கை. அஃறிணைப்பொருள்களாகிய விலங்குமுதலியவைகளும் தம்முடைய இனத்தைச்சேர்ந்த ஏனைய பிராணிகளைவிடத் தாம் சில அம்சங்களில் மிகுந்திருந்து அதனால் புகழ்பெற வேண்டுமென்று விரும்புவதை நாம் பிரத்தியட்சமாகக் காண்கிறோம். குதிரை - மாடு முதலிய பிராணிகளையும் சேவல் - புறா முதலிய பறவைகளையும் பந்தயம் விடுகையில் அவற்றிற்குண்டாகும் ரோஷத்தின் மிகுதியைக்காணாதவர் யாவர்? சர்வஜீவதயாபரராகிய கடவுள் மானிடரிடத்து அமைத்துவைத்த சற்குணங்களுக்குள்ளே புகழ்ச்சிவிருப்பும் ஒருவிதசற்குணமென்று மேலோர் ஒப்புக்கொள்ளுவர். மானிடரிடத்துள்ள சற்குணங்கள் யாவற்றினும் புகழ்ச்சிவிருப்பைச் சிறந்ததென்று கூறுவதற்கும் ஒரு பெருத்த நியாயமிருக்கிறது; ஏனெனில் எவனொருவன் பிறர் தன்னைப் புகழவேண்டுமென்கிற எண்ணங்கொள்ளுகிறானோ அவன் பிறர் சரியென்று ஒப்புக்கொண்டு வியந்துரைக்கத்தக்க காரியங்களையே பெரும்பாலும் செய்துகொண்டு வரவேண்டியவனாவான்.

உலகத்தில் தன்னைப்புகழவேண்டுமென்கிற எண்ணத்துடன் பிரவர்த்திக்கிற ஒவ்வொருவனும் பெரும்பாலும் ஜனசமூக வாழ்க்கைக்கு அனுகூலமான நற்காரியங்களையே செய்யவேண்டிவரும். அந்தப்படி செய்யாவிடில், யாவரும் ஏககாலத்தில் ஒருவனை யாதொரு தீய காரியத்துக்காக எவ்வளவும் வியவார். பிறருடைய மதிப்பையும் அவமதிப்பையும் நாம் ஒருபொருளெனமதியோம், அவர்களுடைய புகழ்ச்சியையும் இகழ்ச்சியையும் ஒருபடித்தாய் நாம் கருதுவோம் என்று முற்றத்துறந்த ஞானிகளைப்போல் வாய்ப்பறை யடிப்பவர்களைப் பெரும்பாலும் அகங்காரிகளென்றே மேலோர் கூறுவர். அப்படிப்பட்டவர்களுடைய செய்கைகள் - "நாடொப்பனசெய்." "தேசத்தோடொத்துவாழ்." என்னும் பிரமாணங்களுக்குப் பெரும்பாலும் விரோதப்

பட்டிருக்கும். அப்படிப்பட்ட அகங்காரிகள் தாம் யாருடன் கலந்து வாழ்கின்றார்களோ அவர்கள் ஒப்புக்கொள்ளத்தக்க நடையுடைபாவனைகளை அனுசரியாமல் தம்முடைய மனம்போனவழி வேறொன்றை அனுசரிக்கும்போது அவர்களுடைய இகழ்ச்சிக்கு உள்ளாகவேண்டிவரும். அவர்களுடைய இகழ்ச்சியை ஒரு பொருளாக மதியாவிடில் அப்படிப்பட்டவர்களை அகங்காரிகளென்றே கூறவேண்டியதல்லவா? இகபர ஆசைகளை முற்றும் ஒழித்து இருவினையொப்பு அமையப்பெற்ற ஞானிகளைப்பற்றியன்று இங்கு கூறவந்தது. இல்வாழ்வானுயிருந்து உலகப்பற்று எவ்வளவும் ஒழியாதவனுகி ஏனைய விஷயங்களில் பேராவாகொண்டிருக்கும் ஒருவனைப்பற்றியே இங்கு சொல்லவந்தது.

உலகத்தில் நற்கருமங்களைச்செய்த சத்புருஷர்களுக்குள்ளே பெரும்பான்மையோர் அந்தரங்கத்தில் புகழையே விரும்பியிருந்தவர்களாகத் தெரியவருகிறது. அது காரணமாக யாம் அவர்களைச் சத்புருஷர்கள் அல்லரென்று கூறவந்தோமில்லை. எவ்வகைப்பட்ட சத்கருமங்களுக்கும் புகழ்ச்சிவிருப்பே மனதில் மூலகாரணமாயிருக்கிறதென்பதைக் காட்டவந்தோம். சகல பொருள்களிடத்தும் ஆசையை முற்றும் விட்டொழிக்கவேண்டிய துறவற நெறியைப்பூண்ட ஒருவனுக்குப்புகழ்ச்சிவிருப்பையும் விட்டொழிப்பது அத்தியாவசியமென்று கூறவந்தவிடத்தில் ஒருசிறந்த நூலாசிரியர் அடியில் வருமாறு கூறுகின்றார்:—

"உன்னுகின் றனையுனைமனோர் பெரியனென் றுணருமாசெயவுன்பான்
மன்னுமீசனே பந்தம்வீடளிப்பவன் மற்றையரறிந்தென்ன
மன்னவன் திருப்பொன்னடி கரியதாவருந் தவஞ்செய்நெஞ்சே
பின்னைமுன்னவ னுலகறிந்திறைஞ்சுமா பெருமைசெய்குவனே."

உன்னை இவ்வுலகத்திலுள்ளார் தவத்தால் பெரியவனென்று அறியுமாறு செய்ய நீ கருதுகின்றாய்; உன்னிடத்துவிட்டு நீங்காது நிலைபெற்றிருக்கின்ற கடவுளே நீ செய்த பாவபுண்ணியத்தை யறிந்து அவற்றிற்கு ஏற்கப் பந்தமும் வீடும் கொடுப்பார், அவரையன்றி மற்ற ஜீவர்கள் உன்னைப் பெரியவனென்று அறியும்படி அவர்கள் காண நீ செய்யும் தவத்தால் உனக்கு யாது பயன்? ஜீவசாட்சியைக்குறியாமல் கடவுள் திருவடி சாட்சியாக அரியதவத்தை நெஞ்சமே நீ செய், அந்தப்படி நீ தவஞ்செய்தபின் யாவர்க்கும் முதல்வராகிய கடவுள் இவ்வுலகத்திலுள்ளார் யாவரும் உன்னைப் பெரியவனென்று அறிந்து வணங்கும்படி உனக்குப் பெருமையைக் கொடுப்பார், இதை நீ அறிவாயாக, என்று பொருள்படக் கூறிய மேற்கண்ட பாசுரத்தின் கருத்தை யோசிக்கையில், உலகத்திலுள்ள சிலர் தன்னைப் புகழவேண்டுமென்று விரும்பியமனதை நோக்கி, இப்புகழில் நீ கருத்துவையாதே, கடவுள் சாட்சியாக நீ தவஞ்செய்தால் உலகத்திலுள்ளார் யாவரும் உன்னை வணங்கும்படியான பெருமை உனக்குக் கிடைக்கும் என்று கூறியது விந்தையினும் விந்தையாயிருக்கவில்லையா? இவ்வளவு தூரம் இங்கு

சொல்லவந்ததெல்லாம் எவ்வகைப்பட்டவர்களுக்கும் புகழ்ச்சியில் விருப்பை யொழிப்பது கூடாதென்பதையும் புகழ்ச்சிவிருப்பு ஜீவ இயற்கை என்பதையும் காட்டுவதற்கேயாம்.

இல்லற இயலைக் கூறவந்த திருவள்ளுவ நாயனுர் இல்வாழ்க்கை என்னும் அதிகாரம் முதலாகப் புகழ் என்னும் அதிகாரம் ஈருக இருபது அதிகாரங்கள் கட்டளையிட்டிருக்கின்றனர். இல்லற இயலின் கடைசியில் புகழைப்பற்றிய அதிகாரத்தை அப்பெருந்தகையார் சேர்த்தது யாது காரணத்தினுல்? கிருகாச்சிரம தருமத்தில் நிற்பவன் அன்புடைமை - விருந்தோம்பல்-ஈகை முதலியவற்றைத்தழுவுவதும், பிறர்மனைவிழைதல்-அழுக்கறுத்தல்-பயனில்சொல்லுதல் முதலியவற்றை விலக்குவதும் இல்லறவாழ்க்கையின் இறுதிப்பயனுகிய புகழைப் பெறும்பொருட்டே என்னும் உண்மைதோன்றவே நாயனுர்புகழைப்பற்றிய அதிகாரத்தை இல்லற இயலின் கடைசியில் வைத்ததாகத் தோன்றுகிறது.

"தோன்றிற் புகழொடு தோன்றுக வஃதிலார்
தோன்றலிற் ருேன்ருமை நன்று."

மானிடராய்ப் பிறந்தால் புகழுக்கு ஹேதுவாகிய நற்குணங்களோடு பிறக்கக்கடவர், அப்படி பிறவாதவர்கள் மனிதர்களாய்ப் பிறத்தலினும் பிறவாமலிருத்தலே நன்று என்றும்,

"வசையொழிய வாழ்வாரே வாழ்வா ரிசையொழிய
வாழ்வாரே வாழா தவர்."

வசையுண்டாகாமல் புகழுண்டாகும்படி வாழ்பவர்களே வாழ்பவர்களென்று சொல்லப்படுவார், புகழுண்டாகாமல் இகழுண்டாகும்படி வாழ்பவர்களே வாழாதவர்கள் (இறந்தவர்கள்) என்று சொல்லப்படுவார் என்றும் தெய்வப்புலவர் தமது பொதுமறையில் கூறியிருக்கின்றனர். மேலெடுத்துக்காட்டிய நியாயங்களினுல் புகழ்ச்சிவிருப்பு ஜீவ இயற்கை என்றும் புகழுக்கு ஹேதுவாகிய கருமங்களை ஒவ்வொருவரும் செய்யவேண்டியதென்றும் தெளிவாய் விளங்குகிறது.

ஆனுல் நல்ல காரியங்களுக்காக உதவத்தக்க பொருள்களை மனிதன் தன்னுடைய துர்க்குணங்களினுல் தீயகாரியங்களுக்கு உபயோகப்படுத்திக்கொள்வதுபோல, நற்குணங்களுக்கும் சற்கருமங்களுக்கும் பெருங்கருவியாயிருக்கும்படி மனிதனுடைய மனதில் கடவுள் தோற்றுவிக்கும் புகழ்ச்சிவிருப்பு என்னும் குணத்தைச் சில தீயோர் கெடுத்துப் பாழாக்குகின்றனர். அத்தீயோருடைய மனதில் பிறர் தம்மைப் புகழவேண்டும் என்கிற ஒரு எண்ணம் மாத்திரம் சதா குடிகொண்டிருக்கின்றதேயன்றி அப்புகழைப் பெறுவதற்குவேண்டிய நற்குணங்களையடையவும் சற்கருமங்களைச்செய்யவும் அவர்கள் முயலுவதில்லை. இல்லாத நற்குணங்களை உள்ளதுபோல் மேலுக்குக்காட்டி நடித்து அப்புல்லறிவாளர் புகழ்பெற விரும்புகிருர்கள். இவர்களைவிடப் பெ

ரும்பொய்யர்கள் வேறு உலகத்தில் உண்டா? இப்படிப்பட்டவர்கள்தம்மிடத்து இல்லாத குணங்களை உள்ளனவாக ஒருவன்வந்து முகஸ்துதி பண்ணுகையில் பெருமகிழ்ச்சிகொண்டு பின்னர் விளக்கில் விழுந்து இறக்கும் விட்டில்போல் துக்கிப்பர். முகஸ்துதியினால் ஏமாந்து போகிறவர்களுக்கு வரும் பெருங்கேடுகளைப்பற்றி இங்கு விவகரிக்கவேண்டிய அவசியமில்லை. புகழ்ச்சிவிருப்பை விசேஷமாக மேலேகூறியதெல்லாம் அப்புகழை விரும்புவதற்கு ஹேதுவாகிய குணங்களை வாஸ்தவத்தில் அடையவும் காரியங்களைச்செய்யவும் ஒருவன் மனமொழிமெய்களினால் பாடுபடவேண்டுமென்னும் கருத்தைக்கொண்டேயாம். உத்தமர்கள் இன்ன சற்கருமங்களைச்செய்தால் அதற்குக் கூலியாக இவ்வளவு புகழுண்டாகும் என்பதை நோக்காமலே நல்ல காரியங்களைச்செய்வார்கள். அக்காரியங்களின் பயனாகப் புகழ் அவர்களுக்குத் தானே விளையுமென்பதற்கு எவ்வளவும் சந்தேகமில்லை. நாம் மனச்சாட்சிக்கு ஏற்கச் சற்கருமங்களைச் செய்துகொண்டே வரவேண்டியது. அவற்றிற்குப் பயனாகப் புகழ் தானேவிளையும். புகழ் விளையவேண்டுமென்று கருதி ஒரு காரியத்தைச் செய்வது மாத்திரம் சரியல்ல. அறிவுடையோர் நம்முடைய குணதிசயங்களையும் செய்கைகளையுங் கண்டு மெச்சுவதையே புகழென்று சொல்லவேண்டும். அறிவிலிகள் நம்மை எப்படிசொன்னாலும் அதனால் நாம் மனக்கலக்கம் கொள்வது சரியன்று. ஏனெனில்,

> "அவமதிப்புமான்ற மதிப்புமிரண்டு
> மிகைமக்களான் மதிக்கற்பால-நயமுணராக்
> கையறியாமாக்களிழிப்பு மெடுத்தேத்தும்
> வையார் வடித்தநூலார்."

ஒருவரைத் தாழ்வாகமதித்தல்-உயர்வாகமதித்தல் என்னும் இவ்விரண்டும மேன்மக்களால் மதிக்கத்தக்கன, விதிவிலக்குகளை யுணராத கயவர்களுடைய இகழ்ச்சியையும் புகழ்ச்சியையும் ஒருபொருளென அறிவுடையோர்கொள்ளார் என்று பிரமாணமிருக்கிறது.

உலகத்திலுள்ளயாவரும் தன்னைப்புகழும்படி ஒருவன்நடந்துகொள்ள முயல்வது வியர்த்தமாய்முடியும். "உலகத்தோடொட்ட வொழுகல்." என்பதுபோன்ற சந்தர்ப்பங்களில் உலகு என்பதை உயர்ந்தோரென்றே உரையாசிரியர் பலருங்கூறியிருக்கின்றார்கள். வாசனையென்னும்பதம் நறுமணத்துக்கும் தீநாற்றத்துக்கும் பொதுவானதாயிருக்கினும்அதைநறுமணத்துக்கே நாம்உபயோகித்து வருவதுபோலப்புகழ் என்னும்பதம் சற்கருமங்களுக்குரித்தானதாகவே உபயோகிக்கப்பட்டு வருகின்றது. திருடர்களும் பொய்யர்களும் வசிக்கும் யாதொருஊரிலிருக்கும்ஒருவன் அவ்வூரில்புகழ்பெறவேண்டுமானால் பெருந்திருடனாகவும் பெரும்பொய்யனுமாக வல்லவா இருக்கவேண்டிவரும்? அவ்வாறு அத்திருடர்களும் பொய்யர்களும் தன்னைவியப்பது எதார்த்தத்தில் புகழாகமாட்டாது. ஆகவே அறிவுடையோர் வியந்து புகழத்தக்க காரியங்களைப்புரிந்து தன்னை இவ்வுலகத்தில் நிலைபெறச்செய்து

கொள்ளவேண்டியது மானிடனாய்ப் பிறந்த ஒவ்வொருவனுக்கும் பரம புருஷார்த்தமாகும். ஏனெனில்,

> " ஒன்றா வுலகத் துயர்ந்த புகழல்லாற்
> பொன்றாது நிற்பதொன் றில். "

உலகத்தில் அழியாது நிலைபெறுவது தனக்கு நிகரில்லாது ஓங்கியபுகழையன்றி வேறில்லை. இதற்கு ஈகையிற்சிறந்த கர்னனும் சத்தியத்திற்சிறந்த அரிச்சந்திரனும் பொறையுடைமையிற் சிறந்த தர்மபுத்திரரும் நாளைக்கும் புகழுடம்புபெற்று உலகத்தில் ஓங்குவதே உதாரணமாயிருக்கின்றது.

அழகே பெரும்பாலும் அரிவையரை அல்லற்படுத்தும்.

உலகத்தில் புருஷர்கள் பெரும்பாலும் வனப்பிற் சிறந்த வனிதையரையே தமது இல்வாழ்க்கைத் துணைவியாக்கிக்கொள்ள விரும்புகிறார்கள். பெண்களின் குணவிசேடங்களைக் கண்டறிந்து வியப்பதைவிடுத்து வெளிப்புறத்தே தோன்றும் உதவியற்ற சருமத்தின் அழகையே பெரும் பொருளென மதித்து அனேகர் மதிமயக்கங் கொள்ளுவது பெரும் பேதமையாகும்,

> " ஊறியுவர்த்தக்கவொன்பதுவாய்ப்புலனுங்
> கோதிக் குழம்பலைக்குங் கும்பத்தைப்-பேதை
> பெருந்தோளி பெய்வளா யென்னுமீப்போர்த்த
> கருந்தோலாற் கண்விளக்கப் பட்டு. "

மலங்கள் பொதிந்து வெறுக்கத்தக்க நவத்துவாரங்கள் வழியாகவும் அசுத்தத்தைக் கொண்டுவந்து ஒதுக்கும் தேகமாகிய குடத்தை, அறியாதவன் - அதன்மேல் மூடிக்கொண்டிருக்கும் அழகிற்சிறந்த தோலினால் மயங்கிப், பெருந் தோளையுடையவளே ! என்றும் வளையலணிந்தவளே ! என்றும் பலவாறாகத் துதிப்பானென்று பொருள்படப் பெரியோர் கூறிய பிரமாணங்களை அவர்கள் அறிந்திலரோ? இதனால் கேவலம் குரூபிகளையே தமக்கு மனைவிகளாகக் கொள்ளவேண்டுமென்பதல்ல; ஆனால் அழகு ஒன்றினாலேயே மயங்குவது பேராபத்துக்கு இடந்தரும் என்பதே எம் கருத்து. அழகற்றவர்களாய்ப் பிறந்தும் சகலகுண நலங்களும் பூரணமாய் நிறையப்பெற்ற சில பெண்கள் புருஷர்களிடத்துள்ள மேற்கண்ட துரபிப்பிராயங் காரணமாகத் தீராமனக்கிலேச மடைந்து அழுத கண்ணும் சிந்திய மூக்குமாக வருந்துவதை மன்றிப் பிராணத்தியாகம் செய்துகொண்டு மிருக்கிறார்கள். சற்குணங் காரணமாகவன்றி, வெளிப்புறத்தே தோன்றும் அழகின் காரணமாக யாதொரு பெண்ணை நாம் வியந்து நேசிப்பது-தீம்பாலைப் பயக்கத்தக்க பசுவை வெறுத்துப் பளபளவென்றிருக்கும் மேனியையுடைய வேங்கைப் புலியை வளர்த்து அதற்கிரையாகி மா

ளும் அவிவேகியின் செய்கையை ஒக்குமென்பதற்கு எவ்வளவும் ஐயமில்லை.

“ அல்லலேபெண்ணெனப்பிறத்தலாங்கதி
னல்லலேயிளமையிற்சிறத்தலாங்கதி
னல்லலேகட்டழகுடைமையாங்கதி
னல்லலேயிரவலர்சார்பினுறுதல். ”

இவ்வுலகத்தில் பெண்ணாகப்பிறத்தலே அல்லலுக்கிடமாகும், வயோதிகத் தன்மை யடையாமல் பாலிய தசையிலிருப்பது அதனினும் அல்லலாகும், இளமைப் பருவத்தோடுங்கூடப் பேரழகு அமைந்திருத்தல் அதனினும் அல்லலாகும், தரித்திர தசையிலுள்ள ஒரு புருஷனுக்கு வாழ்க்கைப்பட்டிருத்தல் அதனினும் பெருத்த அல்லலாகுமென்று பொருள்படும் இவ்வற்புதமான பாசுரத்துக்கு உதாரணமாக ஒரு கதை எழுதுகிறோம்;—

ஓரூரில் தரித்திரப்பிராமணனொருவன் மூன்று தாரமிழந்து சற்றேறக்குறைய அறுபது வயதானபின்பும் ஒருபிராமணச் சிறுமி அழகிற்சிறந்தவளாயிருந்ததைக்கண்டு ஆசைமிகுதியால் அவளை விவாகம் செய்துகொள்ள நிச்சயித்தான். அப்பெண்ணின் தாய்தந்தையர்கள் சற்றேனும் யோசனையின்றி அக்கிழப்பிராமணனுக்கு அவளை விவாகம்செய்து கொடுத்துவிட்டார்கள். அவள்பெயர் பத்மாவதி. அவள் ரூபலாவணியத்தில் அக்காலத்து அந்தப்பிரதேசத்திலிருந்த எல்லாப்பெண்களிலும் மிகச் சிறந்தவளாயிருந்தாள். அவளுடைய குணகுணங்களைக் கண்டறியாமலே அவ்வேழைப்பிராமணன் சமானதிகமற்ற அவளது அழகின் விசேஷத்தால் மதிமயங்கி அவளை விவாகம் செய்துகொண்டான். வறுமையின் மிகுதியால் அவ்வந்தணனும் பத்மாவதியென்னும் மனைவியும் துன்பப்பட்டுக்கொண்டிருக்கையில், காசிக்கு யாத்திரைசெய்து வந்தால் பற்பல இடங்களிலும் யாத்திரைபண்ணிக் குபேரசம்பத்துடன் வீடு வந்து சேரலாமென்றெண்ணி ஒருநாள் அக்கிழவன் தன்கையிலிருந்த கொஞ்ச திரவியத்தைத் தன்மனைவியிடத்தில் கொடுத்துத் தான் கொண்டகருத்தைத் தெரிவிக்க, அவள்-என்பிராணநாயகா! அப்படியேசெய்க என்றுகூறிச் செலவுகொடுத்தனுப்பினள். பத்மாவதி தன்னுடைய நாயகனது பிரிவாற்றாமையால் மனத்தளர்ச்சியடைந்து, அவன் திரும்பிவரவேண்டிய நாளை எண்ணியெண்ணி உயிர் வாழ்ந்துகொண்டிருக்கையில், அவ்வூர் அரசன் ஒருநாள் அவளைக்கண்டு அவளது நிகரற்ற பேரழகினால் மதிமயங்கித், தனக்கு அதற்கு முன்பே மூன்றுநாயகிமாரிருந்தும் அவளை எவ்வகையாலும் விவாகம் செய்துகொள்ளவேண்டுமென்னும் துர்எண்ணங்கொண்டான். மறுநாள் அரசன் தன் அரண்மனைத் தாதிகளைநோக்கி, நீங்கள் எவ்வித்திலாவது இவ்வூரிலுள்ள ஏழைப்பிராமணனது பத்தினியாகிய பத்மாவதியை எனக்கு மணஞ் செய்விக்கவேண்டுமென்று குறையிரந்தான். அவர்கள் அங்ஙனமே பத்மாவதி யண்டைவந்து அம்மா! உன் அழகு முழுவதும் விழலுக்கிறைத்த நீர்போலும், நிர்மானுஷ்யமானகாட்டில் புஷ்பித்த தாமரைபோலும் பயனற்றதாய் விடுகின்றதே, இவ்வூரரசனை நீமணம்புரிவாயாகில் உனக்கு எல்லாச்சம்பத்தும் உள்ளங்கை நெல்லிக்கனிபோலாகி நீ இப்பிறவியினாலாகிய பெரும்பயனை யடையலாமே என்று பலவாறாகத் துர்ப்புத்திகூற, அதைக்கேட்டுப் பத்மாவதி பேதமையால் மனத்தளர்ச்சியடைந்து அப்படியே ஆகட்டுமென்று சம்மதிக்க, உடனே அரசன் அவளை விவாகம் செய்துகொண்டான். அரசன் தன்அரசாட்சிக்குட்பட்ட குடிகள்யா

வரும் தனக்குக் குழந்தைகள் என்னும் முறையை நாடாமலும், பிறர்மனைவி ழைதலைப்பற்றிக்கூறியிருக்கும் அடியிற்கண்ட பாசுரத்தைப்போன்ற பிரமா ணங்களை அறியாமலும் இத் தீக்காரியம் செய்ததுஅம்மம்ம ! கொடிது கொடி து ! அப்பாசுரமாவது:—

"வம்புலாங்கூந்தன்மனைவியைத்துறந்துபிறர்பொருள்தாரமென்றிவற்றை
நம்பினுறிறந்தானமன்றமர்பற்றியெற்றிவைத்தெரியெழுகின்ற
செம்பினுலியன்றபாவையைப்பாவிதழுவெனமொழிவதற்கஞ்சி
நம்பனேவந்துன்றிருவடியடைந்தேனைமிசாரணியத்துளெந்தாய்."

தாதிமார் நாளாவர்த்தியில் சொல்லிவந்த துர்ப்போதனையினுல் "எறும்பூரக் கற்குழியும்." என்றபடி பத்மாவதியானவள் தன் பிராமண மரபுக்குரிய நல் லொழுக்கமனைத்தையும் அறவே கைவிட்டுப் புலால் முதலியவற்றை அரசனு டன் உண்டுகளித்து வாழ்ந்துவந்தனள். அவளிடமாக அரசனுக்கு ஒரு ஆண் குழந்தை பிறந்தது. இப்படியிருக்கையில் காசியாத்திரைசென்ற அந்தணன் தன் உத்தேசப்படி திரவியம் சம்பாதித்துக்கொண்டு தன் வீட்டுக்குவந்து நட ந்த விருத்தாந்தங்களை எல்லாம் ஆதியோடந்தமாகக் கேள்வியுற்று ஒருவாறுக மனந்தேறி ஒருயாசகனைப்போல வேஷம்பூண்டு அரசனுடைய அந்தப்புரவாயி லிற்சென்று இரக்கக்குறிப்புடன் தியாகங் கேட்டுக்கொண்டிருக்கையில், பத் மாவதி அவனைக்கண்டமாத்திரத்தில் குரலொலியால் தன் பழைய நாயகனென் றறிந்து, கிழவா! இங்கு நீ நில்லாதே, நீ இன்னுனென்று நான் அறிந்துகொண் டேன், அரசன் கண்டால் உன்னை இம்சிப்பான், உடனேபோய்விடு, நடந்து போன விஷயங்களைப்பற்றி இப்போது துக்கிப்பதிற் பயனில்லை, நீ கடைசி யாக எதாவது என்னிடத்திற் கூறவேண்டியதாயிருந்தால் உன் மனுேபாவத் தை விரைவிற் சொல்லிமுடியென்று அந்தரங்கமாய் அவனிடத்தில் வசனித் தாள். அதற்கு அவன் - உயிர்க்காதலியே ! பெண்மணியே ! என்னிடத்து நீ இருந்தபோது வறுமையினுல் அல்லற்பட்டுக்கொண்டிருந்தனை, இப்போது நீ அஷ்டஐஸ்வரிய போகபாக்கியங்களை அனுபவிப்பதற்காக என்கண் பூரிக்கி ன்றது, "விதியேமதியாய்விடும்." என்னும்பெரியோர்வாக்கு அபத்தமாகுமா? நீ எப்படியாவது க்ஷேமமா யிருந்தால் போதும், ஆனுல் தனித்து உன்னி டத்தில் இரண்டொரு வார்த்தை மாத்திரம் பேசிக் கடைசியாய் விடை பெற்றுக்கொண்டு தேசாந்தர யாத்திரை போய் என்காலை ஆண்டவனுக்கு ஒப் பித்து விடுகிறேன்,இவ்வொரு எண்ணத்தை மாத்திரம் நீ நிறைவேற்றவேண்டு ம்,அங்ஙனம் நீ செய்யாவிடில் உன் விஸ்வாச காதகத்தை நினைத்துநினைந்து நா ன் பிராணனை விடுவேன் என்றுஉறுதி மொழி கூறினுன். அது கேட்டு பத்மா வதி "தொன்மை மறவேல்." என்றபடி பழைய சகவாசத்தை மறவாது நல் லது, அப்படியே ஆகட்டும், இவ்வூர்ப் பிடாரியார் ஆலயத்தைச் சேர்ந்த மண் டபத்தில் நீ வந்திரு, நான் இன்று இரவில் சரியாய்ப் பன்னிரண்டு மணிக்கு உன்னை வந்து பார்க்கிறேனென்று வாக்கு தத்தஞ் செய்து அவனை அனுப்பி விட்டனள். அன்று இராத்திரி அதி விரைவாய்த் தன் குழந்தையைத் தூங்கச் செய்து பத்மாவதி சில பலகார வர்க்கங்களைச் சித்தம்பண்ணி வைத்துக் கொண்டு மண்டபத்தண்டை போவதாய் நிச்சயித்திருக்கையில், அரசன் அன் று நெடுநேரம்வரையில் நித்திரைகொள்ளாது அவளிடத்துப் பற்பல விஷயங்க ளைப்பற்றி வேடிக்கையார்த்தமாய்ப் பேசிக்கொண்டே யிருந்தான். அந்தண னை வந்து சந்திப்பதாய் உறுதி மொழி கூறிய சமயம் சமீபித்து விட்டபடி யால், அவள் ஐயோ ! கிழவன் வீணே மரிப்பானே என்று நினைத்து, அரசன் குடிக்கவிருந்த பாலில் அவனுக்குத் தெரியாமல் விஷங் கலந்து அவனைக் கு டிக்கச் சொல்லவே அவன் அதை உட்கொண்ட மாத்திரத்தில் பிரக்ஞையற்று

போய்விட்டான். அன்று அந்திப்போதே அந்தக்கிழப் பிராமணன் அம்மண்டபத்தில் போய்ப்படுத்துக் கொண்டிருக்கையில் ஒரு நாகசர்ப்பம் அவனைத் தீண்டியபடியால் விஷந் தலைக்கேறி அவன் அங்கு இறந்து கிடந்தான். அவ்விடத்திற்கு அதி தீவிரமாய் வந்த பத்மாவதி அப்பிரேதத்தைக்கண்டு பலவாறாகத் துக்கித்தாள். அப்போது இராத்திரி நெடுநேரமாய் விட்டபடியாலும் மீண்டும் வீட்டை வந்தடைவதற்குத் திரும்பிவரத் துக்கமிகுதியாலும் பயத்தினாலும் காலெழாமல் அவ்விடத்திலேயே இருந்தனள். இவளிப்படியிருக்கையில், அவ்வூரரசன் இவள் பாவிவிட்ட நஞ்சினால் இறந்து போனமையினாலே அவளுடைய கொடுஞ்செய்கை அவ்வூர் முழுமையும் பரவி எங்கும் பேரரவமுண்டாகவே அதைக்கேட்டுப் பத்மாவதி இனி இங்கிருந்தால் ஆபத்து விளையுமென்றஞ்சி அம்மண்டபத்தை விட்டு நெடுந்தூரம் வரையில் அதி விரைவாய் ஒருவருக்குந் தெரியாமல் யாத்திரை செய்துகொண்டே இரண்டு மூன்று நாள் கழித்து ஒருநாள் இரவில் வேறொரு ஊரைச் சேர்ந்த மயானத்தின் வழியாய்த் தேகம்மெலிந்து மனம்நொந்து நடைதளர்ந்து சோர்வடைந்து போய்க்கொண்டிருந்தாள். அப்போது அதி சவுந்தரியமுள்ள ஒருவேசி அவ்வூரில் இறந்துபோக அவளைக் கொண்டுவந்து அம்மயானத்தில் தகனஞ்செய்துவிட்டுத் துக்க சாகரத்தில் மூழ்கி அழுதுகொண்டேவரும் தாய்க்கிழவி பத்மாவதியைக்கண்டு அம்மா! என மகளே! மறுபடியும் நீ உயிர் பிழைத்து வந்தது என் பாக்கியம், இது பரியந்தம் நீ இறந்ததும் உன்னைக்கொண்டுவந்து நான் தகனஞ் செய்ததும் கனவுதானோ? என்று பத்மாவதியைக் கட்டிக்கொண்டு முறையோ முறையோ என்று அழுதனள். இக்கிழவியைக்கண்டு பிரமித்து ஒன்றுந் தோன்றாமல் பத்மாவதியானவள் ஆதியோடந்தமாகத் தன் வரலாற்றைக்கூற அத்தாய்க்கிழவி பத்மாவதியைப் பார்த்து அம்மா! இறந்து இதோ வெந்து கொண்டிருக்கிற என் மகளுக்கும் உனக்கும் ரூபலாவணியத்தில் அணுவளவும் பேதமில்லை, ஆகையால் நீ அவளைப்போலவே எனக்கு மகளாக இருந்து என் துக்கத்தை ஆற்றுவாயாக என்று குறையிரந்தனள். பத்மாவதி அதற்குச் சம்மதித்து அவளுடன் சென்று அவ்வூரில் அத்தாய்க்கிழவியின் குலத்தொழிலை அருவருப்பின்றி நடத்திக்கொண்டுவந்தனள். இவ்வாறு நெடுநாளான பின், பத்மாவதி முன்னிருந்த ஊரை அரசாண்டுவரும் தன் புத்திரன் இப்போது நல்ல யௌவன பருவமுடையவனாகி அந்நிய பிரதேசங்களைப் போய்ப் பார்க்கவேண்டுமென்று அவாக்கொண்டு இவ்வூரில் பத்மாவதியிருக்கும் வீதி வழியாகக் குதிரை சவாரி செய்துகொண்டு போகையில் பத்மாவதியின் சவுந்தரியத்தைக்கண்டு மதிமயங்கி அவள் விலைமகளெனவறிந்து அவ்வீட்டுக்குள் சென்றான். கொஞ்சநேரத்திலெல்லாம் அவன் பத்மாவதியின் முகஜாடையும் தன் முகஜாடையும் எல்லாவிதத்திலும் ஒத்திருப்பதைக்கண்டு தன் உடைவாளையுருவிக்கொண்டு அவளைப்பார்த்து, நீ யார்? உன் வரலாறுயாது? உண்மையைச் சொல்லுவாயாகில் உன்னை விட்டுவிடுகிறேன், இல்லாவிடில் இவ்வாளாயுதத்துக்கு உன்னை இரையாக்கிவிடுவேன் என்று பயமுறுத்துதலும், பத்மாவதி நடுநடுங்கி ஆதியோடந்தமாகத் தன் விருத்தாந்தத்தைச் சொல்லிமுடித்தனள். அதைக்கேட்டு அவள் புத்திரனாகிய அவ்வரசிளங்குமரன் தன் மாதாவை நோக்கி, அம்மே! மஹாபாதகி! பரமதுரோகி! என்பிதாவைக் கொன்றதற்காக உன்னைப்பழிவாங்க என் மனம் எண்ணுகினும் கை மாத்திரம் எழவில்லை, உன் கருப்பாசயத்தில் யான் பத்துமாதம் தங்கியிருந்ததையும் நீ என்னைப் பத்துமாதம் சுமந்து வருந்தி ஈன்றெடுத்ததையும் நினைந்தே உன்னை இப்போது விட்டுவிடுகிறேன், இனி உன்னை முகாலோபனமும் செய்யமாட்டேன் என்று சொல்லித் தன் ஊருக்குத்திரும்பினான்.

"தன்னெஞ்சே தன்னைச்சுடும்." என்று ஆன்றோர்கூறிய பிரமாணப்படி பத்மாவதி தன் துஷ்கிருத்தியங்களினைக்குந்தோறும் மனச்சான்று அவளாற்ற முடியாதவகைக்கு இடித்திடித்து அவளை அல்லற்படுத்தினமையால், இனி தற்கொலைபுரிந்துகொண்டு இவ்வுடற்பொறையை நீக்கிக்கொள்வது உத்தமமென்றெண்ணி, அவ்வூர்க்குச் சமீபத்திலிருந்த ஆற்றங்கரையில் பெருந்தீமூட்டி அக்கினிப் பிரவேசமாயினள். அத்தருணத்தில் தெய்வகதியால் அந்த ஆறு பெருக்கெடுத்து அவ்வக்கினியை அவித்து அவளை உயிரோடு நெடுந்தூரம் வரையில் அடித்துக்கொண்டுபோகையில் மற்றொரு ஊரைச்சேர்ந்த புலத்துக் கருகாமையில் ஓர் இடையன் பசுமாடு மேய்த்துக்கொண்டிருக்கும்போது அவளைக்கண்டான். கண்டமாத்திரத்தில் அவன் விரைந்தோடிவந்து தன் இன்னுயிரையும் ஒரு பொருளெனமதியாது அப்பிரவாகத்திலிறங்கி அவளை வெளியே எடுத்துவிட்டான். உடனே அவளுடைய அழகின் மிகுதியைக் கண்டு அதிசயமடைந்து அவ்விடையன் அவளைப்பார்த்து, நீ எனக்கு மனையாட்டியா யிருக்கவேண்டுமென்றுகூற, அதற்கு அவள் சம்மதிக்கவேண்டியதாயிற்று. அதன்மேல் அவ்விடையன் பத்மாவதியை வீட்டுக்கு அழைத்துக்கொண்டுபோய்த் தனக்கு மனையாட்டியாகவைத்து அவளைப் பரிபாலித்துவந்தான். இந்தப்படியிருக்கையில், ஒருநாள் பத்மாவதியும் அவ்விடைச்சேரியிலிருந்த இன்னும் சில பெண்களும் தத்தம் குடங்களில் பால் தயிர் மோர்முதலியவற்றை எடுத்துக்கொண்டு அவ்வூரில் வழக்கப்படி விற்பனை செய்வதற்காக ஒருநாள் புறப்பட்டார்கள். அவர்கள் அவ்வாறு புறப்பட்டுவருகையில் அவ்வூர் அரசனுடைய யானை மதமேறிக் கட்டுத்தறியை முறித்துக்கொண்டு பாகனைக்கொன்று பிளிறிட்டு அவ்வீதிவழியாக ஓடிவந்தது. அவ்வூரிலுள்ள யாவரும் தத்தம் மெத்தைகளின்மீது ஏறி அவ்வேடிக்கையைப் பார்த்துக்கொண்டிருந்தார்கள். அவ்வூர்அரசனும் தன் உப்பரிகையின்மீது ஏறித் தன் யானையின் ஆரவாரத்தைப் பார்த்துக்கொண்டிருந்தான். அந்த யானை இவ்வாறு ஓடிவருவதைக்கண்டு பயந்தபடியினால் பத்மாவதியின் தலையின்மீதும் ஏனைய இடைப்பெண்களின் தலைகள்மீதும் இருந்தகுடங்கள் தவறிவீழ்ந்து உடைபட்டன. மற்றப்பெண்களெல்லாம், ஐயோ! பால் போயிற்றே! அந்தோ! தயிர்போயிற்றே! என்செய்வோம்! என்செய்வோம்! என்று கைகளை நெரித்துக் கண்களில் நீர் சோர வயிற்றைப் பிசைந்துகொண்டு அழுதார்கள். பத்மாவதியோ தன் மோர்க்குடம் உடைந்துபோனதற்காக இலேசமும் துக்கியாதவள்போல் கைகொட்டிக் கலகலவென்று சிரித்துக்கொண்டு இருந்த இடத்திலேயே இருந்தனள். இதை உப்பரிகையிலிருந்து பார்த்துக்கொண்டிருந்த அரசன் பெருவியப்படைந்து ஒன்றும் தோன்றாமல் உடனே ஏவலாட்களை விடுத்துப் பத்மாவதியை அழைத்துக்கொண்டு வரச்சொல்லி அவளைப் பார்த்து, அம்மே! குடங்கள் உடைந்துபோனதற்காக உன்னுடன் கூடவந்த பெண்களெல்லாம் அழுகின்றார்கள். நீ ஒருத்திமாத்திரம் கைகொட்டிக் கலகல என்று சிரிப்பது யாதுகாரணத்தால்? என்று கேட்டான். அதற்குப் பத்மாவதி அடியிற்கண்ட செய்யுளைக் கூறலாயினாள்:—

சாதிமார்க்கந்தவிர்ந்துண்ணுமனுனுண்டு தாழ்ந்ததற்கேயழுவனோ
தவமுற்றபாலனைத்தனியற்றுவேந்தைதஞ்சுட்டியதனுக்கழுவனோ
ஆதிநாடாவிகட்டியபுருடனைக்கொன்றவரவந்தனக்கழுவனோ
வருங்கான்புகுந்துபின்மறுமன்னர்தம்வேசியானதற்கேயழுவனோ[னோ
வேதையான்மைந்தனைத்தழுவிவெங்கனலின்கண்வீழ்ந்ததற்கேயழுவ
வெள்ளம்புகுந்துதள்ளாடிமல்லாடியேவிட்டதற்கேயழுவனோ
நீதிபாலிடையனுக்கின்பமங்கையுமாகிநின்றதற்கேயழுவனோ
நிகரிலாராஜகெம்பீரனேநானிந்தநீர்மோர்க்குநின்றழுவதே."

பத்மாவதியின் பூர்வ விருத்தாந்தங்கள்யாவும் அடங்கிய இப்பாசுரத்தைக் கேட்டு அரசன் மனமுருகிப் பெருந்துக்கமுடையார்க்குத் துக்கந் தோன்றுதுபோலும்! என்று வியந்து பத்மாவதியைப்பார்த்து நீ போய்வாவென்று சொல்லி அனுப்பிவிட்டான். சிலநாள் பொறுத்துப் பத்மாவதி தன்தேகத்தின் அழகெல்லாம் குன்றிப் பற்பல வியாதிகள் மிகுந்து தளர்ந்து கோலூன்றி,

> "நலமிலாமூப்புத்துன்பகடைதளர்ந்துரைதழுத்துச்
> சலமதேமிகவுந்தோன்றித்தண்டெகண்ணுகிச்சித்தக்
> கலனமேபிறந்துகண்டார்கார்ச்சித்தங்குமிழும்வண்ண
> மலைவெலாஞ்செய்யுமூப்பின்வருந்துயரந்தோபாராய்."

என்று பெரியோர் கூறியபடி வயோதிகத்தினுல் உண்டாகும் பற்பல வியாதிகளுக்கு உள்ளாகி அவள் தன் துஷ்கிருத்தியங்களுக்கு ஏற்றதண்டனையை இம்மையிலேயே அனுபவித்து மரித்தனள்.

இக்கதையினுல் நாம் அறியவேண்டிய நீதிகள் பல உள:— (1.) சற்குணம் அமையப்பெறுமல் யாதொருபெண் கட்டழகுடையவளாயிருக்கின் அவளுக்கும் அவளைச்சேர்ந்தவர்களுக்கும் அதைவிட மிக்க அல்லலைத்தருவது வேறொன்றுமில்லை. (2) யாதொருபெண்ணுக்கு இயற்கையில் சற்குணம் அமைந்திருக்கிறதா இல்லையா என்பதைத் தீரவிசாரியாமலே அழகையே பொருளெனமதித்து மணம்புரிவது ஒருவனுக்குப் பெருத்த ஆபத்துக்கிடம். (3) தன்னையும் தன் மனையாளையும் பாதுகாப்பதற்கேற்ற தகுந்த ஜீவனோபாய மில்லாதவன் மணம் புரிந்துகொள்வது பெரும்பேதமை. (4) வயோதிகனானவன் அதிபாலிய பெண்களை விவாகஞ்செய்துகொள்வது துர்வழக்கங்களுள் நடுநாயகம். அதனுல் விளையும் தீமைகள் எண்ணில. (5) ஒருவன் தனக்கு நாயகனாக அமைந்தபிறகு அவன் வறியவனாயினும் வயோதிகனாயினும் பிணியாளனாயினும் வேறே எவ்வகைப்பட்டவனாயினும் அவனையே "குலமகட்குத் தெய்வங் கொழுநனே." என்றும், "குலமகட்கழகுதன்கொழுநனைப்பேணுதல்." என்றும் பெரியோர் கூறியபடி நேசித்துவருவது உத்தமஸ்திரீகளின் கடமை. இதை மறந்தவர்கள் இம்மையிலேயே நிரயத் துன்பத்தை அனுபவிப்பார்களென்பதற்கு ஐயமில்லை. (6) மனம் யாதொரு துஷ்டகிருத்தியத்தைச் செய்ய எழுகையில் பிரதமத்தில் விவேகம் வேண்டாமென்று பன்முறையும் தடுக்கும், அதன் வழியே அப்போது நில்லாது அதிக்கிரமித்து அத்துஷ்டகிருத்தியத்தைச் செய்ய மனதை விடுவோமாகில் பிறகு விவேகம் ஆற்றல் குன்றி, எனக்கென்? வந்ததைப்படுக, என்று வாளா இருந்துவிடும். ஆகவே மனமென்னும் யானை மதோன்மத்தனுயெழும்போதே விவேகமென்னும் அங்குசத்தைக்கொண்டு அதை நாம் அடக்கவேண்டும். அங்ஙனம் செய்யாது ஒருவிசை அப்பாழ்மனதைப் போனபடி விட்டாலோ, பிறகு அதை அடக்க எவ்வளவும் முடியாது. பத்மாவதி தன்புருஷனை விடுத்து அரசனை மணஞ் செய்வதென்னும் பிரதம திக்காரிய மொன்றினுலேயே ஏனைய திக்காரியங்களைத்தையும் செய்ய மனங் கூசாதவளாயினள். (7) ஏழைப்பிராமணனை ஏமாற்றித்தெருவில் விட்ட பரம துன்மார்க்கனுகிய அ

ரசனே நஞ்சூட்டிக்கொல்ல பத்மாவதிக்கு ஈஸ்வரன் எண்ணத்தந்த விசித்திரமே விசித்திரம்! "எளியரைவலியர்வாட்டின் வலியரைவிருநீர்வைப்பி, னளியறத்தெய்வம்வாட்டும்." என்னும் ஆன்றோர் மொழி அரசன் விஷயத்தில் பலித்தது. (8) வறியனும் வயோதிகனுமான பிராமணன் வீணைச மிருதியால் பத்மாவதியை மணந்த மஹாபாவத்துக்காக அவன் அரவந்தீண்டி மடிந்ததும் ஈஸ்வர சம்மதமே. (9) மனச்சான்றுக்கு ஏலாத துஷ்ட கிருத்தியங்களைச் செய்துவிட்டபிறகு உயிர் தாங்கி யிருப்பதைவிடத் தற்கொலை புரிந்துகொண்டு மடிவதே உத்தமமென்று கருதுவது பெரும்பாலும் மனுஷசுபாவம். கொலை முதலிய மஹாபாதகங்களைச் செய்தவர்களுக்குள் அனேகர் மன அமைதியின்மையால் தற்கொலை புரிந்துகொண்டார்களென்பதைச் சரித்திரத்தால் அறிகிறோம். (10) பிற உயிரைக்கொல்வது எவ்வளவு பாதகமோ அவ்வளவு தன் உயிரை மாய்த்துக்கொள்வதும் ஒருவனுக்குப் பெரும் பாதகமாகும். "வஞ்சவினைக்கொள்கலனுமுடலைத்தீவாய்மடுக்கிலேன் வரையுருண்மோய்ப்பேனல்லே, னஞ்சொழுகுவாளாலுங்குறைப்பேனல்லே னுதனையதுவுநினதுடைமையென்றே யஞ்சினேன்." என்று மூதறிஞர் கூறிய அமுதவாக்கியத்தைத் தற்கொலை புரிந்துகொள்ளத் தலைப்படும் பேதைகள் சிந்திப்பாராக. துன்பத்தை அனுபவிக்கவேண்டுமென்று ஈஸ்வரன் இத்தேகத்தை நமக்குத் தந்திருக்கின்றபடியால் அதைச்சகித்துக்கொண்டு அனுபவித்தலே நாம் ஈடேறும் மார்க்கமாகும். (11) பெருந்துக்கம் மேலிட்டபோது அதன் உணர்ச்சியற்றுப் போவது மனோதத்துவ லட்சணம். (12) துஷ்கிருத்தியம் செய்தவர்களுக்கு இம்மையிலேயே பற்பல துபாங்களும் விளையும். ஆகையால் கடவுளொருவர் இல்லை, மறுமைப்பயனென்ப தொன்றில்லை என்னும் சித்தாந்தத்தைக் கையாளுபவர்களும் தாமும் தம்மைச் சேர்ந்தவர்களும் உலகிலே சுகித்து வாழவேண்டுமென்றால் மனமொழி மெய்களினால் சற்கருமங்களைச் செய்து கூடாஒழுக்கத்தை விலக்கவேண்டும்.

காட்டுமனிதர்களும் ஓநாய்க்குழந்தைகளும்.

(தொடர்ச்சி.)

ஸ்ரீஉல்லியம் என்பவர் தாமே நேரில்கண்ட இன்னும் சில ஓநாய்க்குழந்தைகளைப்பற்றி எழுதியிருக்கிறார். அவற்றுள் ஒன்று மிகவும் விந்தையானது. மூன்று வயதுள்ள ஒரு குழந்தையை நிழலில் தூங்கவைத்துவிட்டு அதன் தாய்தந்தையர் புலத்தில் வேலைசெய்துகொண்டிருக்கையில் ஓர் ஓநாய்வந்து அதைத் தூக்கிக்கொண்டு போய்விட்டது. அதற்கு ஆறுவருஷம் கழிந்து, அந்தச் சிறுவனும் அந்த ஓநாயும் அதன் குட்டிகளும் ஆற்றண்டை தண்ணீர் குடிக்கவருவதை அவர்கள் கண்டு, அந்தச் சிறுவனது வலதுகையிலேயிருந்தமரு

ளினாலும் காயவடிவினாலும் முன்பு ஓநாய் தூக்கிக்கொண்டுபோன குழந்தை அவனேயென்று நிச்சயித்தார்கள். ஸர் உல்லியம் அவனைப் பார்த்தகாலத்தில் அவனுக்கிருந்த காட்டுத்தன்மை சற்றே நீங்கியிருந்தது, ஆயினும் அவனுக்குப் பேசத்தெரியவில்லை. ஆடையுடுத்துக்கொள்ள அவன் இணங்கவில்லை. அவன் நாற்காற்பாய்ச்சியே நடந்தான். நன்றாய்ப் பக்குவஞ்செய்யப்பட்ட உணவைக்கண்டால் அவனுக்கு மஹா அருவருப்பாயிருந்தது. வேகாததும் அழுகியதுமானமாமிசமே அவனுக்கு அதிக பிரீதியாயிருந்தது. ஊரிலுள்ள சிறுவர்கள் பிடித்துக்கொண்டுவந்து போடும் தவளைகளை அவன் பேரானந்தத்தோடு தின்றுவந்தான். இராக்காலத்தில் அவன் காட்டுக்குள்ளே ஓடிப்போய்விடுவான்.

காட்டுமிருகங்கள் எல்லாவற்றுள்ளும் ஓநாய்களே குழந்தைகளை அதிகமாகக் கொண்டுபோயின என்பதற்கு இந்துதேசத்தில் எவ்வளவோ கதைகளுண்டு. அவற்றோடு பழகுவதனால் மானிடகுணம் முற்றும் வேறுபட்டுப் போய்விடுகின்றது. இதுவிஷயம் பொய்யன்று. ஸர் உல்லியம் தாமே நேரில் கண்டதை நாம் நம்பாதிருப்பதெப்படி?

இவ்வாறே ஐரோப்பியருள்ளும் பல கதைகளுண்டு. இத்தேசத்தில் வழங்கிவருகின்ற கதைகளுக்கும் அங்குள்ள கதைகளுக்கும் மிக்க பொருத்தமுண்டு. வில்ஹேம்டிலிச் என்பவர் தாமெழுதிய சரித்திரத்தில், சில வேடர் காட்டில் சஞ்சரிக்கையிலே ஓர் ஓநாய்க்கூட்டத்தினடுவே ஓர் சிறுவனைக்கண்டதாகச் சொல்லியிருக்கிறார். அவர் எழுதிவைத்திருப்பதில் அந்தச் சிறுவனைத்தாமே நேரில் பார்த்ததும் பாராததும் நன்றாய்த்தெரியவில்லை. அவன் நாற்காற்பாய்ச்சி நடப்பானென்றும், மனிதனைக்கண்டாற் கூச்சப்பட்டோடுவானென்றும், நன்றாய்ச் சமைக்கப்பட்ட உணவைக்கண்டால், அதைத்தொட்டும் பாராமல் மேஜையின்கீழ் பதுங்கிக்கொள்ளுவானென்றும் சொல்லியிருக்கிறார். 1661-ம் ௵த்தில் போலாண்டு என்னும்தேசத்திலுள்ள கிரோடோனோ என்னும் நகரத்திற்கருகேயிருக்கும் ஓர் காட்டில் ஒரு கரடிக்கூட்டத்தின்மத்தியில் இரண்டு சிறுவர் இருந்தனரென்றும், அவர்களுள் ஒருவன் கரடிகளோடு கூடவே ஓடிப்போய்விட்டானென்றும் ஓர் வித்துவான் எழுதியிருக்கிறார். பிடிக்கப்பட்டவனுக்கு வயது ஒன்பது. அவன் வார்ஸா நகரத்திற்குக் கொண்டுபோகப்பட்டு அக்காலத்தில் அங்கு அரசுசெலுத்திவந்த ஜான் காசிமர் என்னும் வேந்தனிடம் ஒப்புவிக்கப்பட்டான். அவ்வேந்தன் அவனைத் தன் அரண்மனையில் சிறிதுகாலம் வைத்திருந்து அதன்பின்பு அவனைத் தன் அரண்மனை வேலைக்காரரில் ஒருவனிடம் ஒப்புவிக்க, அவன் அவனைச் சமையலறையில் பாண்டங்களைக் கழுவும் வேலையைச் செய்யச்சொல்லவே, அந்தச் சிறுவன் எப்படியோ யாருக்கும் தெரியாமல் சமயம் பார்த்துமீண்டும் வனத்திற்கோடிப்போய்விட்டான். அந்தச் சிறுவனும் நாற்காற்பாய்ச்சி நடந்தானென்றும், கண்டதையெல்லாம் தின்றானென்றும், புலாலைச்சமையாத

படியே உண்டுவந்தானென்றும் கனிந்தபழம் தேன் - சர்க்கரை இவற்றை உண்பதில் அவனுக்கு மிக்க அவா இருந்ததென்றும், அவன் மற்றமனிதர்களைப்போல் நிமிர்ந்துநடக்க ஆரம்பித்தபோது காடியைப் போலவே நெளித்து விகாரரூபத்தோடு நடந்தானென்றும் சொல்லியிருக்கிறது. ஜர்மனிகாட்டில் பாம்பேரக் என்னுமூரில் காட்டிலிருந்த சிறுவனொருவன் எருதைப்போலவே முக்காரஞ்செய்து வந்தானென்றும், 1731-ம் வருஷத்தில் காலனஸ் என்னும் இடத்தில் பிடிக்கப்பட்ட ஓர் சிறுமி மாரன் ஆற்றில் மீனைப்போல இருந்தாளென்றும் அவள் மானிடருள் ஓர் விசித்திரமான சிருஷ்டியென்றும் ஒரு ஆசிரியர் தம்முடைய கிரந்தத்தில் கூறுகின்றனர்.

மேற்போந்த சரித்திரங்களையெல்லாம் தொகுத்துப்பார்க்குமிடத்துச் சில உண்மைகள் வெளிப்படுகின்றன. நீர்வாழ்வன - ஊர்வன - பறப்பன - விலங்குகளென்னும் பாகுபாடுடைய எண்ணிறந்த ஜீவராசிகளுக்கும் பகுத்தறிவென்னும் விவேக முதிர்ச்சி யிராதபடியினால் அவற்றை அஃறிணைப் பொருள்களாகவும், அவற்றைவிட ஆற்றலில் குறைந்தவர்களாயிருக்கினும் மனிதர்களுக்குப் பகுத்தறிவென்னும் விவேக முதிர்ச்சி யிருக்கிற காரணத்தினால் அவர்களை உயர்திணைப் பொருள்களாகவும் கொள்ளவேண்டியதாயிருக்கிறது. இவ்வளவு சிறந்த விவேக விளக்கத்தைப் பெற்றிருக்கினும் மனிதன் இயற்கையில், அதி பாலிய தசையிலே யாருடைய சமூகத்தில் என்ன விதமாய் வளர்க்கப்படுகிறானோ அதற்கேற்றபடியே அவனிடத்தில் அப்பியாசங்கள் அமைகின்றன. மனிதன் நீங்கலாக ஏனைய பிராணிகள் பெரும்பாலும் அதி பாலிய தசையிலேயே தத்தம் இனத்துக்குரிய செய்கைகளை இயற்கையிலேயே தெரிந்து கொள்ளுகின்றன. இன்னும் ஒரு உண்மை விளங்குகிறது. ஓநாய் முதலிய துஷ்ட மிருகங்களும் தமக்கு மானிட குழந்தைகள் எவ்வகையான தீங்கையும் புரியத்தக்கனவல்லவென்று உணர்ந்த காரணத்தினால் அக்குழந்தைகளைத் தம் குட்டிகளைப்போலவே வளர்க்கின்றன. மனிதன் மாத்திரம் ஏனைய பிராணிகளைத் தன்னுடைய விவேகத்தின் வலியால் இம்சிக்காமல் ஜீவகாருண்ணிய முடையவனாயிருந்தால் மானிட குழந்தைகளிடத்தில் அவை எவ்வளவு பரிவு பாராட்டுகின்றனவோ அவ்வளவு விசுவாசத்துடன் அவனோடு கலந்து உறவாடும். சிறு குழந்தைகளைத் தேள் முதலிய துஷ்டப் பிராணிகள் ஒன்றுஞ் செய்வதில்லை யென்றும், ஆரணியங்களில் சுவாசத்தை நன்றாய்ப் பந்தித்துக்கொண்டு மரித்தவர்களைப்போல் பாசாங்கு போட்டுக்கொண்டிருந்தவர்களைச் சிங்கம் முதலிய கொடிய விலங்குகளும் ஒன்றுஞ் செய்யாமல் போய்விட்டனவென்றும் நாம் கேள்விப்படுகிறோம். ஆகையால் ஏனைய பிராணிகள் தம்மைப் பலவிதத்திலும் மனிதர்கள் இம்சிக்கத்தக்க பரம துஷ்டர்களென்பதை உணர்ந்தே அவர்களை வெறுக்கின்றன. ஆகவே ஏனைய பிராணிகளை இம்சிக்காதிருப்பவனை "எல்லாவுயிருந்தொழும்." என்று கூ

றிய நாயனாரது அமுதவசனத்தில் எவ்வளவு உண்மை அடங்கியிருக்கிறது!

உத்தியோகம் வேண்டுமா?

(தொடர்ச்சி.)

அரசன்-நல்லது, இன்னுமொருதரம் இவனைச் சோதித்துப்பார்ப்போம் என்று தனக்குள் யோசித்து, மதிவல்லபனைநோக்கி, நீ நம்முடைய ஆளுகைக்குட்பட்ட எல்லாத் தேசங்களினுஞ்சென்று அங்கங்குள்ள மனிதர், விலங்கு, புள் முதலியவற்றில் ஆண் இத்தனை, பெண் இத்தனையென்றும் மரம் மலை இத்தனையென்றும் கணக்கெடுத்து ஒவ்வொன்றின் மொத்தம் இவ்வளவு என்று சொல்லவேண்டும், இவ்வுத்தியோகத்திலும் உனக்குச் சம்பளங்கிடையாது, உன் எழுத்தாணியைமாத்திரம் ஓயாமல் அசைத்துக்கொள்ளலாம் என்று கட்டளையிட்டனன். அதுகேட்ட மதிவல்லபன் அரசனைவணங்கி, மஹாராஜனே! அடியேன் தேவரீர்கட்டளையைச் சிரமிசை வஹித்துச்செய்வதற்கு யாதும் தடையில்லை, அப்படியே செய்கிறேன் என்று அரசனிடத்தில் விடைபெற்றுக்கொண்டு வீட்டுக்கு வந்துவிட்டான். மறுநாள் சில சிப்பந்திகளோடும் ஒரூருக்குச்சென்று, அங்கு ஒரு வீட்டிலுள்ளமனிதர் ஆடுமாடு கோழிமுதலியவற்றின் கணக்கெடுக்கப்போனான். அவ்வீட்டார் பயந்தோடிவந்து மதிவல்லபனைநோக்கி, ஐயா! இதுவரையிலும் செய்யாத இக்காரியத்தை இப்போது அரசன் செய்வதற்குக் காரணம் யாது? சற்றே தயைசெய்து சொல்லவேண்டும் என்று மதிவல்லபனை வேண்டிக்கொண்டார்கள். அவன் இது ராஜாங்க ரகசியமாதலால் ஒருவருக்கும் தெரிவிக்கக்கூடாது என்று கூறினான்.

இக்குடிகள் யாவருக்கும் எவ்வித துன்பமும் நேரிடாவண்ணம் அவர்களுடைய உயிரைத்தன்னுயிர்போல் பாதுகாத்துவரும் அரசனிடத்து இவர்களுக்கு எவ்வளவு விசுவாசமிருக்கிறதோ பார்ப்போம், வேற்றரசன் படையெடுத்துவந்தால் இவர்கள் உண்மையில் தங்களுடைய அரசனுக்காக அமர்க்களத்திலிருந்து உயிர்விடுவார்களா? அல்லது அத்தருணத்தில் அவனைவஞ்சிப்பார்களா? இதைக்கண்டறிவோமென்று அவர்களைப்பார்த்து, நீங்கள் இவ்விஷயததை வேறொருவர் செவியிலும் போடக்கூடாதென்று வற்புறுத்தி அடியில்வருமாறு சொல்லத்தொடங்கினன். நம்முடைய அரசனோடு அந்நியதேசத்தரசன் ஒருவன் நாலுமாதத்துக்குப்பின் யுத்தத்துக்கு வருவதாகக் கடிதம் அனுப்பியிருக்கிறான்.

“அடற்றகையு மாற்றலு மில்லெனினுந் தானை
படைத்தகையாற் பாடு பெறும்.”

சேனைக்குப் போர்செய்யும் சௌரியமும், பகைவர் மேல்வந்தெதிர்த்தால் தாங்கும் வலிமையும் இல்லாவிட்டாலும் பெருங்கூட்டமாகிய தோற்றப்பொலிவால் பெருமையுண்டாகு மாகையால், நம்முடைய அரசன் தன் ஆளுகைக்குட்பட்ட தேசங்களிலுள்ள எல்லா ஆண்பிள்ளைகளும் அக்காலத்தில் ஒருவர் தவறாமல் யுத்தத்துக்கு வரவேண்டுமென்றும், பெண்கள்யாவரும் இராணுவத்துக்கு வேண்டிய போஜனாதிகளைப் பாகஞ் செய்யவேண்டுமென்றும், ஆடு கோழிகள் முதலியவை ஆகாரத்துக்கு உபயோகப் படவேண்டுமென்றும் ஒன்றுவிடாமல் கணக்கெடுத்து மொத்தம் காட்டும்படி கட்டளையிட்டனன் என்றுசொன்னான். அவர்கள் யாவரும் மனங்கலங்கி, மதிவல்லபனைத் தனியேஅழைத்துக் கொண்டுபோய், எங்கள் வீட்டுக்கணக்கை உம்முடைய ஏட்டில் பதியாமல் விட்டுவிட்டால் உமக்கு மாதாந்தரம் இவ்வளவு தருகிறோம் என்று அவனுடன் ஏற்பாடு செய்துகொண்டார்கள். இவ்வாறே ஒவ்வொரு கிராமத்திலுஞ் சென்று அங்கங்குள்ள ஆண்-பெண்-கால்நடைகள் முதலிய சராசரங்கள் யாவற்றையும் கணக்கெடுத்து வருகையில் இராஜவிசுவாசமுள்ளவர்கள் இன்னார் இன்னாரென்பதையும் விசுவாசமற்றவர்கள் இன்னார் இன்னாரென்பதையும் ஏட்டில் குறிப்பிட்டுக் கொண்டான். இன்னும் சில குடிகள் உள்ளபடி கணக்கைக் கொடுத்துவிட்டார்கள். இப்படி யிருக்கையில், அரசன் ஒருநாள் மதிவல்லபனை யழைப்பித்து, நாம் சொன்னபடி! கணக்கெடுத்து முடிந்ததா? என்று கேட்டான். மதிவல்லபன் அரசனை நோக்கி, மஹாராஜனே! பறக்கும் பட்சிகளை யெல்லாம் ஒன்று விடாமல் கணக்கெடுத்து விட்டேன். காக்கைகளில் ஆண் இரண்டுலக்ஷம், பெண் இரண்டரை லக்ஷம், முட்டை யுருவாயிருப்பவை ஒருலக்ஷம் என்று அப்பால் சொல்லிக்கொண்டே போனான். அரசன், நல்லது, அது இருக்கட்டும். மனிதர்களுள் ஆண் பெண் எத்தனை என்று கேட்டான். மஹாராஜனே அதில் ஒரு திராச்சந்தேகம் வந்திருப்பதால் அதன் பொருட்டு உம்முடன் தனியே யோசித்துச் செய்ய வேண்டுமென்று விட்டிருக்கிறேன் என்றான். அரசன் அவனைத் தனியே அழைத்துக்கொண்டுபோய் அச்சந்தேகம் யாதென வினவ, மஹாராஜனே! உம்முடைய தேவிமார்களில் பாண்டியன் புத்திரி ஆணோ பெண்ணோ? தெரிவித்தால் உடனேகூட்டிமொத்தம்தைத்துச் சொல்லுகிறேன் என்று கூறினான். பாண்டியன் புத்திரி அலியென்று தன் ஒருவனுக்கு மாத்திரம் தெரியுமேயன்றி மற்றைத் தேவிமார்களுக்கும் இது விஷயம் தெரியாதாகையால் அரசன் மிகவும் நாணமுற்று இவன் கணக்கு முழுதும் சரியாகவே யிருக்குமென்று தனக்குள்ளே தீர்மானித்து அவனுடைய புத்திபலத்துக்காக அதிக சந்தோஷங்கொண்டான். அப்போது மதிவல்லபன் அரசனை நோக்கி மஹா ராஜாவே! நான் தேவரீருடைய கட்டளையின்படி கணக்கெடுத்து வருகையில் ஒரு அருமையான சங்கதி தெரியவந்தது, அது யாதெனில்-தேவரீருடைய அரசாட்சிக்குட்பட்ட குடிகள் யாவரும் இரா

ஐ விசுவாச மிருப்பவர்களாக எண்ண வேண்டாம், வேற்றரசர் படை யெடுத்து வர நேரிடுமாகில் தேவரீருடைய குடிகள் இன்னபடி ஒழுகுவார்களென்பதை இப்போதே அறிந்துகொண்டு அதற்கேற்றபடி நீங்கள் முன்னெச்சரிக்கையோடிருக்க வேண்டியதல்லவா? என்று கூறி, இன்னின்ன கிராமத்தில் இன்னின்ன குடிகள் விசுவாசமற்றவர்களென்பதை அக்குடிகளின் வாய்மொழியைக் கொண்டே மெய்ப்பித்தான். தன்குடிகளின் பலாபலத்தை அறிந்து கொண்டிருப்பது அரசனுக்கு அத்தியாவசியமானபடியால் மதிவல்லபனுடைய தந்திரத்தை அரசன் வியந்து, இவன் உண்மையானவனும் மிக்கபுத்தி சாதுரியமுள்ளவனும் என்பதற்கு யாதும் ஐயமில்லை, இவனுக்கு எவ்வளவும் வரும்படியற்றதும் கஷ்டமானதுமான தொழில்களைக் கொடுத்தாலும் அவற்றிலெல்லாம் இவன்விவேகத்துடன் பிரவர்த்திப்பதுமன்றி நமக்குப் பெருத்த சலகாரணங்களைக் காட்டுகிறான், இப்படிப்பட்ட ஒருவன் நம்மிடத்தில் இருந்தால் நமக்குப் பல ஆதாயவழிகளைக்காட்டி ராஜ்ய காரியத்துக்கும் மிக்க அனுகூலமுள்ளவனாயிருப்பானென்று துணிவு கொண்டு மதிவல்லபனைத் தன்னிடத்தில் மந்திரியாக வைத்துக்கொண்டான்.

ஆகையால் விவேகவிளக்கம் ஒன்றை மாத்திரம் ஒருவன் தன் கைப்பொருளாகப் பெற்றிருப்பானாயின் எவ்வகையாலும் அவன் பிழைக்க வகைதேடிக்கொள்ளலாம். உத்தியோகம் நமக்கு அகப்படப்போகிறதில்லையே யென்று கருதி விவேகத்தை அபிவிருத்தி செய்வதற்கேதுவாகிய கல்வியை அனேகர் கைவிடுகிறார்கள். இது பெருந்தவறு.

மேலெடுத்துக்காட்டப்பட்ட மதிவல்லபனுடைய சரித்திரத்தை வாசித்துப் பொய்யுரைத்து ஒருவன் தன்மதிவல்லபத்தைக் காட்டுவதும் முறையோ? என்று கேட்கலாகாது. ஏனெனில் அவன் எழுத்தாணி சற்று அசைய இடங் கிடைக்குமானால் போதும் என்று சொன்ன வார்த்தையை அரசனுக்கு மெய்ப்பிக்க வேண்டுமென்னும் ரோஷத்தினாலும், குடிகளுக்குள்ளே இன்னார் இன்னார் இன்னின்ன நிலைமையிலிருக்கிறார்களென்பதை அரசனுக்குக் காட்டவேண்டியதென்னும் நல்ல எண்ணத்தினாலும் அத்தகைய தந்திரங்களை அவன் அனுசரித்தானேயன்றி அரசனை வஞ்சிக்கவேண்டுமென்கிற துர் எண்ணம் அவனுக்கு எவ்வளவுங் கிடையாது. மேற்கண்ட பற்பல தந்திரங்களை அவன் அனுசரித்தானேயாயினும் ஒவ்வொரு தடவையிலும் ஒன்றையும் அவன் ஒளியாமலும் அரசனுக்கு வஞ்சனை பண்ணாமலும் நடந்துவந்ததை இதை வாசிப்பவர் கவனித்தல்வேண்டும். அதற்காகவே அரசன் அவனைவியந்து தனக்கு அமைச்சனாக்கிக் கொண்டனன்.

ஓர் காடியின் கதை.

௫-ம் அத்தியாயம்.

கனிமரச்சோலை.

விக்கிரமவீரன் இவ்வாறு ஓடிவந்துசேர்ந்த கனிமரச்சோலை காட்டின் எல்லைக்கு அதி சமீபமாயிருந்தது. அந்த சோலை விக்கிரமவீரனுடைய வாசஸ்தலமாகிய இமாசலச்சாரலின் அடிவாரத்தில் ஒரு குடியானவனுடையது.

இதற்கு முன்னே பல தடவைகளிலும் காட்டேக்குள்ளே ஒரு மரத்தின் மேல் உட்கார்ந்துகொண்டு விக்கிரமவீரன் அந்த மலைச்சாரலின் அடிவாரத்தை உற்றுப் பார்த்துக்கொண்டிருக்கும். அப்போது விருட்சங்களின் மத்தியில் சிறுகுடிசைகள் இங்கும் அங்குமாகப் போட்டிருக்குங்காட்சியும், மலைச்சாரல்களின் மேற்புறமாக நாற்புறமும் தோட்டங்களும் கனிமரச்சோலைகளும் தழைந்திருக்குங்காட்சியும், மலையின் அடிவாரத்தில் பள்ளத்தாக்காயிருக்கும் இடங்களிலே திராட்சச்செடிகள் அணியணியாய் நேர்நேராகநெடுந்தூரம் வரையில் வைத்துப் பயிராகிவருங்காட்சியும்,அந்தச் செடிகள் அப்போதுதான் தலையெடுத்து வளரத்தொடங்குங்காட்சியும் அதன் கண்ணுக்குப்புலப்பட்டுவந்தன. விக்கிரமவீரன் சென்றவருஷம் சில திராட்சக்குலைகளைத்தின்று உருசிகண்டிருந்தபடியினால், இவ்வருஷம் குலைகள் நன்றாய்ப்பழுப்பதற்குமுன்பாகவே அச்செடிகள் பயிராகும்சோலைக்குள் பிரவேசித்து அவற்றைத்தின்ன ஒருவர் கண்ணுக்கும் தென்படாதபடி இரகசியமாய்ப்போக ஒருபாதையைக்கண்டுபிடிக்கவேண்டுமென்று தனக்குள் தீர்மானித்துக் கொண்டது.

இதற்குமுன்னே பல தடவைகளிலும் விக்கிரமவீரன் அந்த தோட்டங்களைப்பார்த்திருந்தபடியினால், காட்டைக்கடந்து அத்தோட்டங்களுக்குள் பிரவேசிக்கத் துணிச்சல்கொள்வதற்குமுன், மலை அடிவாரத்திலேயுள்ள ஜனங்களின் அப்பியாசங்கள் யாவும் அதற்கு நன்றாய்த்தெரிந்திருக்கிறது. அங்குள்ள ஜனங்கள் அதிகாலையிலெழுந்திருந்து தத்தம் தோட்டங்களில் வேலைசெய்து பிறகு தங்கள் குடிசைக்குப்போகும் வழக்கத்தை அது கண்டிருக்கிறது. ஒருநாள் அது நெடுநேரம்வரையில் அங்கிருந்து கவனித்துக்கொண்டேயிருந்தபோது ஜனங்களெல்லாம் மறுபடியும் வெளியேவந்து ஓர் அகன்றபாட்டை வழியாய்க்கிராமத்தை விட்டுத்தூரமாகப் போவதையும் .அது பார்த்துக்கொண்டிருந்தது ; இந்தப்படி நெடுநேரம்வரையில் அவர்களைப்பார்த்துக்கொண்டிருந்தபோது நெடுந்தூரத்திலிருப்பதாகத் தனக்குத் தோன்றிய ஒரு உயர்ந்த புகைக்கூடு கட்டியிருக்கும் கட்டடவழியாக அவர்கள்போய் மறைந்ததையும் அது கண்டது.

அவர்கள் எப்போதும் அதேமார்க்கமாக என்ன காரணத்துக்காகப் போனார்களோ அதைப்பற்றி அதற்கு ஒன்றும் தோன்றாமல் நெடுநேரம்வரையில் யோசித்துக்கொண்டிருந்து, அவர்கள் ஏதோ ஆகாரந்தேடிக்கொண்டு போகவேண்டுமென்று நினைத்து, அவ்வளவுதூரத்தில் என்ன ஆகாரம் அகப்படக்கூடும்? அவர்கள் எப்போது திரும்பிவருவார்கள் ? என்று ஆச்சரியத்தோடு அது பார்த்துக்கொண்டிருந்தது. நெடுநேரம்வரையில் அங்கு காத்துக்கொண்டிருந்தும் அவர்களில் எவரும் திரும்பிவருவதை அது பார்க்கவில்லை.

அதே இடத்திற்கு விக்கிரமவீரன் அடுத்தடுத்து வந்தபோதெல்லாம் ஜனங்கள் தான் வருவதற்குமுன்பே வேலை செய்துகொண்டிருந்ததை அது கண்டது. அவர்கள் தொழிற்சாலைக்கு வேலை செய்யப்போவதற்கு முன்பாகத் தங்கள் தோட்டங்களைப் பண்படுத்திப் பயிர்செய்ய அதிகாலையில் எழுந்திருப்பதாகத் தெரியவந்தது.

இந்தப்படி தான் வரும்போதெல்லாம் தனக்கு முன்னாக ஆள்கள் எழுந்து வேலைசெய்துகொண்டுவந்தபடியினால் கடைசியாக ஒருநாள் விக்கிரமவீரன் இன்னும் அதிகாலையில் எழுந்திருந்து புறப்பட்டது. சூரியன் அப்போதுதான் விருட்சங்களுக்கு மேலே கொஞ்சம் கொஞ்சமாகப் பிரகாசித்துக்கொண்டிருந்தது. ஆகாயத்திலுள்ள நட்சத்திரங்களுக்குள் சில இன்னும் பிரகாசித்துக்கொண்டே இருந்தன. விக்கிரமவீரன் அதிசீக்கிரமாய் மயிரை நன்றாய் உதறிக்கொண்டு தூங்குமூஞ்சியாகிய சுமுகனை எழுப்பாமல்கூட மலை அடிவாரத்தில் இறங்கி வருகையில் ஆகாயத்தில் ஒருபெரிய நட்சத்திரம் (சுக்கிரன்) சற்றே ஒளிகுன்றி ஜொலித்துக்கொண்டே இருந்தது. செடிகள் முதலியயாவும் எவ்வளவு பச்சென்றும் ஜில்லென்றும் இருந்தன! விக்கிரமவீரன் தான் போய்க்கொண்டிருந்த மார்க்கத்தில் காட்டின் ஓரமாகக் கிடந்த மதுரமான ஒரு நத்தையைத் தின்பதற்காக ஒரு நிமிஷநேரம் நின்றது. அப்போதுதான் சூரியன் கரகரவென்று விருட்சங்களின்மேலும் குன்றுகளின்மேலும் நாற்புறமும் பிரகாசிக்கத்தலைப்பட்டது. விக்கிரமவீரன் இது பரியந்தம் பார்த்துக்கொண்டிருந்த ஒருநட்சத்திரமும் இப்போது மறைந்துபோய்விட்டது. சூரியன் மேற்றிசையில் அஸ்தமனமாகிறவளையில் அந்த நட்சத்திரம் காத்துக்கொண்டிருந்து மறுபடியும் முன்போலவே அழகாய் ஜொலிக்குமென்று விக்கிரமவீரனுக்குத் தெரியும்.

இன்றையத்தினந்தான் கனிமரச்சோலைக்குள் விக்கிரமவீரன் முதல் தடவை பிரவேசித்தது. திராட்சப்பழம்-கொடிமுந்திரிப்பழம் முதலிய கனிகளை வயிறாரத்தின்றதனால் அதற்குண்டான பெருமகிழ்ச்சியை என்னென்று கூறுவது! காலைவேளையில் அவ்வளவு திவ்வியமான பண்டங்களை அது எப்போதுங் கண்டு தின்றதில்லை. தன்னுடைய சகோதரனாகிய சுமுகனை இவ்வளவுதூரம் வீட்டை விட்டு வரும்படி செய்யக்கூடுமானதாயிருந்தால் அதை எவ்விதத்திலாவது மறுநாள் காலையில் இட்டுக்கொண்டு வரவேண்டியதென்று விக்கிரமவீரன் தீர்மானித்துக்கொண்டது.

இவ்வாறு தின்றபிறகு இன்னும் பிராதக்காலமாகவேயிருந்தபடியினால் குடிசைகளுக்கு நாற்புறமும் சுத்தமாகவும் அழகாகவுமிருந்த தோட்டத்துக்குள்ளே போய்ப்பார்க்காமல் வீட்டுக்குத்திரும்ப விக்கிரமவீரனுக்குக் கூடாமையாயிருந்தது. அந்தத்தோட்டத்தில் பயிராய்க்கொண்டிருந்த ஒவ்வொரு வஸ்துவும் தின்பதற்கு யோக்கியதை யுள்ளதாயிருக்குமா வென்று அது ஆச்சரியப்பட்டு தன் குகைக்கு நெடுந்தூரமாகப் பயிராய்க்கொண்டிருந்த சில கிழங்குகளை வேரோடு பெயர்க்க ஆரம்பித்து, அழகாய்ச் சிவந்திருந்த ஒரு பெரிய கிழங்கைக்கடிக்கத்தலைப்பட்டது. அதை விக்கிரமவீரன் நன்றாய்க் கவ்வி ஒருகடி கடித்துக்கொண்டிருக்கையில், நாய்கள் குலைக்கும் சப்தத்தையும் ஆடு மாடு முதலிய கால்நடைகளின் கூச்சலையும் ஒரு நிமிஷம் பொறுத்து பால்பாத்திரங்களின் கலகல என்னும்ஓசையையுங்கேட்டு, இன்னும் அவ்விடத்தில் நாழிபட இருந்தால் ஆபத்து விளையுமென்று தெரிந்துகொண்டு, திபதிப வென்று ஓட்டம்பிடித்தது. அதைத் தோட்டக்காரர்கள் கண்டால் சும்மா விடமாட்டார்கள். அவர்களுடைய தோட்டத்துக்குள் பிரவேசித்து அங்கிருந்த கந்தமூல பலாதிகளைக் கொள்ளையடித்துக் கவளீகாஞ்செய்துவிட்டபடியால் அவர்கள் அதை எவ்விதத்திலும் சிறைப்படுத்திவிடுவார்கள்.

அவ்விடத்திலேயே யிருந்து கந்தமூலங்களைக் கொஞ்சங்கூட பாக்கிவையாமல் நிர்மூலப்படுத்திவிட விக்கிரமவீரனுக்கு இஷ்டமிருந்தபோதிலும் தான் அவ்விடத்திலிருப்பது சரியல்லவென்று அதற்குத் தெரியவந்தது. ஆள்கள்குடிசையைவிட்டு வெளியே புறப்பட்டு வருவதற்குச் சற்றுமுந்திதான் அது

ஒரு அருமையான காட்சி.

தோட்டத்தைவிட்டு வெளியேவர ஆரம்பித்தது, விருட்சங்கள் அடர்ந்திருக்கும் காட்டுக்குள் வந்து சேருகிறபரியந்தம் மஹாவேகமாய் ஓடிவரவேண்டியதாக நேரிட்டது.

வந்துசேர்ந்தவிடத்தில் விக்கிரமவீரன் மற்றக்கரடிகளிருக்கக்கண்டது. இவ்வளவுநேரம் தனியே ஒருவருக்குந்தெரியாமல் தந்திரமாய் விக்கிரமவீரன் எங்கே போயிருந்ததோவென்று மற்றக்கரடிகள் அதிசயமாய்ப்பார்த்துக்கொண்டிருந்தன.

கனிமரச்சோலையைப்பற்றியும் தோட்டத்தைப்பற்றியும் கேள்வியுற்றபோது மந்தானகன்-தன்பிள்ளை இவ்வளவு பாலியதசையிலே இவ்வளவு தைரியமும் துணிகரமுமுள்ளதாயிருக்கின்றதேயென்று அதிக இறுமாப்படைந்தது. யாதொரு குடியிருப்புவீட்டுக்குச் சமீபமாய்ப் போகத் துணிச்சல்கொள்ளக்கூடாது, அவ்வாறுபோனால் பிடித்துக்கொள்வார்கள், என்று பயப்பட்டுக்கொண்டிருந்த சிறுபிள்ளையாகிய சுமுகனைப்பார்த்து எல்லாக்கரடிகளும் சிரித்துக் கேலிசெய்தன.

மந்தானகன் சுமுகனைப்பார்த்து, "வீட்டிலிருக்கும் சிறுகுழந்தைகள் உனக்கு முன்னே பெரிதாகிப் புத்திசாலிகளாய்விடும் என்று நினைக்கிறேன்." என்றது.

வரவர சுமுகன் பயந்தெளிந்து, நாளையத்தினம்காலையில் தோட்டம்வரையில் போகாவிடினும் எவ்விதத்திலாவது கனிமரச்சோலைவரையிலாகிலும் போகவேண்டியதென்று நினைத்தது. ஆனால் அடுத்தடுத்து மூன்று தினங்களாக் இந்தக்கரடிகள் எழுந்துவருவதற்கு முன்னாதாகவே ஆள்கள் எழுந்துவிட்டார்கள். பழங்கள் காணாமையால் அந்தப்பயிரிடுங்குடிகள் திருடனைப் பிடிக்கவேண்டுமென்று அதிசீக்கிரமாய் எழுந்திருந்திருக்கவேண்டியதென்று நினைக்கிறேன். முதலில் இந்த இரண்டு குட்டிக்கரடிகளும் கனிமரச்சோலையண்டைவந்து கடைசியாகச்சேர்ந்தன. திராட்சக்கனிகள் - முந்திரிப்பழங்கள் முதலியயாவும் மாண்டு போயின; சிறுசிறு அத்திகள் அதிககாயாகவும் புளிப்பாகவுமிருந்தபடியினால் அவைகளைமாத்திரம் அந்தக்கரடிகள் விட்டுவிட்டு மற்றெதையும் வைக்கவில்லை. ஆகவே மிகவும் வெறுத்துப்போய் விக்கிரமவீரன் சுமுகனைப்பார்த்து, "தோட்டத்துக்குள்புகுந்து கிழங்குகளை உருசிபார்க்கலாம் வா." என்று பலவிசை வற்புறுத்திக்கூப்பிட்டும், சுமுகன் - "கிழங்குகளும் அடியோடே மாண்டுபோய்விடும்போலும், நான் காட்டிலேயே இருந்துகொண்டு சுலபமாய் அகப்படத்தக்க சில பண்டங்களைமாத்திரம் தின்றுகொண்டு திருப்தியடைகிறேன்." என்றது. இதைக்கேட்டு விக்கிரமவீரன் சுமுகனைப்பார்த்து "முட்டாள், மனுஷியாள் எனக்கு ஒரு இலட்சியமில்லை, என்னை அவர்கள்வந்து எதிர்க்கப்போகிறார்களா வென்று கோரிக்கொண்டிருக்கிறேன்." என்று தன் பிரதாபத்தைச் சொல்லிக்கொண்டது.

சிறுபிள்ளைகளுக்குள்ளே எனக்குத் தெரிந்த சிலரிடத்துள்ள குணங்களெல்லாம் விக்கிரமவீரனிடத்தில் அமைந்திருந்தன. அபாயம் கண்ணுக்குப் புலப்படாதவரையில் அது மஹா தைரியசாலிதான். எவனாவது ஒருமனிதனுடைய தலையைக் காட்டிலே அது கண்டாலும், ஆள்களின் நாய்க்கூச்சலைக்கேட்டாலும் அதன் ஓட்டத்தைப்பிடிக்க எப்படிப்பட்டவர்களுக்கும் முடியாதென்றே சொல்லவேண்டியது.

சில பெரியபட்சிகள் தினம் காட்டுக்குள்ளேயாகிலும் பள்ளத்தாக்கிலேயாகிலும் இறங்கிப்போவதையும் ஏதோ ஆகாரத்தை நகங்களினால் கெட்டியாய்க் கௌவிக்கொண்டு திரும்பிவருவதையும் விக்கிரமவீரன் கவனமாய்ப்பார்த்துக்கொண்டிருப்பது வழக்கம். இப்படியிருக்கையில் ஒருநாள் அது மலைச்சார

லைச் சுற்றிக்கொண்டே திரிந்துவருகையில் தன்னுடைய குகையண்டையிருந்ததைவிட அதிக நிழலாகவும்செடிமுதலியது இல்லாதகற்பாறைகளாகவுமிருந்த ஓரிடத்தண்டை வந்தபோது, இந்த வழியாகக்கழுகுகள் பறந்துபோவதைப்பார்த்து, அவைகளின் வாசஸ்தலத்தைக் கண்டுபிடிக்கவேண்டுமென்று விருப்பங்கொண்டது. இந்த இடம் புல்-பூண்டு-செடி முதலானது அதிகமாய் வளராமல் கட்டாந்தரையாயிருந்தது. இந்த இடத்திற்குச் சமீபமாயிருந்த ஒரு பெருங் குகையண்டை விக்கிரமவீரன்வந்து சேர்ந்து, அந்தக்குகை பெரும்பாலும் தன்னுடைய குகையைப்போலவே யிருந்தபடியினால், மாலைப்போது உலாவப்போயிருக்கும் வேறே சில கரடிகளின் வாசஸ்தலமாகத்தான் அது இருக்கவேண்டியதென்று விக்கிரமவீரன் நிச்சயித்துக்கொண்டது. இதற்கு முன்னமே சிலகரடிகளை அது காட்டில்பார்த்துமிருக்கிறது, அவைகளைச்சந்தித்ததாகத் தன் தாயும் தந்தையும் பேசிக்கொண்டிருந்ததை அது கேட்டுமிருக்கிறது. ஆகவே அவைகளின் வாசஸ்தலத்தை இப்போது இதுகண்டுபிடித்தது.

அந்தக்குகை எப்படியிருக்குமோ அதைக் கண்டறியவேண்டுமென்று மிகவும் ஆவல்கொண்டு விக்கிரமவீரன் அதன் ஒவ்வொருமூலையையும் பரீட்சித்துப்பார்த்து, அதில் விசேஷமொன்று மில்லையென்று அறிந்து கொண்டது. ஆனால் இலைகளால் அமைக்கப்பட்ட படுக்கையின்மேல் இரண்டு அதிபாலிய கரடிகள் உறங்கிக்கொண்டிருந்தன. விக்கிரமவீரன் அங்கிருந்து கழுகுகளின் வாசஸ்தலத்தைக் கண்டுபிடிக்க வேண்டுமென்று மறுபடியும் புறப்பட்டபோது, தோட்டத்தில் பயிராய்க்கொண்டிருந்த கிழங்குகளைப்போன்ற சில கிழங்குகள் அவ்விடத்திலிருப்பதாக அதற்கு வாசனையினால் தெரியவந்தது. கையினால் கொஞ்சங் கீறியவுடனே அக்கிழங்குகள் பூமியிலே எவ்விடத்தில் புதைக்கப்பட்டிருந்தனவோ அந்த இடத்தை விக்கிரமவீரன் தெரிந்துகொண்டு சற்றேறக்குறைய பன்னிரண்டு பருத்த வள்ளிக்கிழங்குகளையும் சில உருளைக்கிழங்குகளையும் தோண்டி, அவற்றை அவ்விடத்திற்குக் கொண்டுவந்து சேமித்து வைப்பதற்காகத் தன் நண்பர்களாகிய கரடிகள் எவ்வளவு பாடுபட்டிருக்கவேண்டுமென்பதைக் கொஞ்சமேனும் யோசிக்காமலே அவற்றுள் ஒன்றையேனும் மிகுதியாகவிடாமல் ஒவ்வொன்றாகயாவற்றையும் தின்றுவிட்டது. அக்குகைவாசிகளாகிய கரடிகள் மற்றநாளைவிட அன்றையத்தினம் நெடுநேரம் வரையில் வெளியிலேயே தங்கியிருந்தது விக்கிரமவீரனுக்கு அதிர்ஷ்டந்தான். அழையாவீட்டுக்கு நுழையாசம்பந்தியாக விக்கிரமவீரன் அக்கரடிகளின் குகையண்டைவந்து அவைகள் அருமையாகத்தேடிவைத்த கிழங்குகளைத்தின்றுவிட்டதற்காக அவைகளுக்கு எவ்வளவு மனவருத்த முண்டாயிருந்திருக்க வேண்டும் !

விக்கிரமவீரன் மிக்க அயோக்கியதையானதென்பதற்கு எவ்வளவும் சந்தேகமில்லை. “பலநாளைய திருடன் ஒருநாளில் அகப்பட்டுக் கொள்வான்.” என்னும் பழமொழியின் உண்மைப்பொருளை யறியாமல் இது இவ்வாறு திருட்டுப் பிழைப்பு பிழைத்துக்கொண்டுவந்தது.

(இன்னும்வரும்.)

பனிக்கட்டியும் அதன் விசித்திரங்களும்.

சூரிய உஷ்ணத்தினால் சமுத்திரம் - தடாகம் - ஏரி முதலிய நீர்நிலைகளிலிருந்து ஆவியாயெழும்பி ஆகாயத்திற்சென்ற அணுக்களின்

சமூகமான மேகமானது குளிர்ச்சியான வாய்வு தாக்குவதினாலே மழைத்தண்ணீராகக் கீழே விழுவதுபோல், பின்னும் குளிர்ச்சியான வாய்வு தாக்குவதினாலே பனிக்கட்டிகளாக விழுகின்றன. உஷ்ணப்பிரதேசமாகிய இந்தியாவைப்போன்ற தேசங்களிலுள்ளவர்களுக்கு அப்படிப்பட்ட பனிக்கட்டிகளின் விசித்திரங்கள் இன்னவையென்று புலப்படா. துருவப்பிரதேசங்களிலுள்ள சிலதேசங்களிலும் ஐரோப்பா முதலிய கண்டங்களிலிருக்கும் அதிசீதள தேசங்களிலும் பனிக்கட்டிகளின் விசித்திரங்களைப் பிரத்தியட்சமாகக் காணலாம். உஷ்ணப்பிரதேசங்களிலே உன்னதமான மலைகளின்மீதுமாத்திரம் அனேகஆயிர அடிகளுக்கு மேலாகப் பனிக்கட்டிகள் கரையாமல் சதா இருந்துகொண்டிருக்கும். சீதளப்பிரதேசங்களிலோ தரை மட்டத்திலேயே நாற்புறமும் பனிக்கட்டிகள் நிறைந்திருக்கும். ஜலம் குளிர்ச்சியின் மிகுதியால் பனிக்கட்டிகளாய் இறுகியகாலத்து அவற்றைக் கற்பாறைகளைக் கொண்டு உடைத்தாலும் அவை உடையமாட்டா. ஐரோப்பாவிலுள்ள ஆல்ப்ஸ் என்னும் பர்வதத்தின் சாரல்களில் யாத்திரைபோகும் அனேகர் தம் மேல் கருங்கற்களைப்போன்ற பனிக்கட்டிகள் அப்பர்வதத்தின் உச்சியிலிருந்தும் விழ எலும்புகளொடிந்து உருதெரியாமல் மாய்ந்தனரென்று நாம் கேள்விப்படுகிறோம். கிரீன்லாண்டு என்னும் தேசத்தில் சற்றேறக்குறைய முக்காலே மூன்றுவீசநிலம் பனிக்கட்டிகளாலாகிய புலத்தால் மூடப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட பனிக்கட்டிகள் பர்வதாகாரமாய் அடுக்கடுக்காக ஓங்கிவளர்ந்து சமுத்திரத்தில் மிதந்துகொண்டேபோகும். அப்படிபோகையில் சமுத்திரத்தின் மேற்பாகத்திலே எவ்வளவு தூரம் அவைகள் உயர்ந்து தோன்றுகின்றனவோ அதைவிட எழெட்டுமடங்கு அதிகமாய் சமுத்திரத்தின் அடிப்புறத்தில் அவைகள் ஆழ்ந்து கிடக்கும். பெருத்த பர்வதாகாரமாய் மகா கெம்பீரத்தோடு மிதந்துகொண்டுபோகும் இப்பனிக்கட்டிகள் மரக்கலங்களைத் தாக்குமாயின் அம்மரக்கலங்கள் எவ்வளவுபெரிதானவைகளாகவும் திண்மையானவைகளாகவும் இருக்கினும் அவை ஒருநொடியில் பொடிப் பொடியாய்விடுகின்றன. பர்வதாகாரமான இப்பனிக்கட்டிகள் சுமார் இரண்டாயிர அடி உயரத்துக்கு ஓங்கிவளர்ந்து சமுத்திரத்தில் மிதந்து வருவதுண்டு. பெரியமலைரூபமாக உயர்ந்துள்ள யாதொருபெரும்பனிக்கட்டி அடுக்கடுக்காக மேலே அமைக்கப்பட்டுள்ள பற்பல சிறு பர்வதாகார பனிக்கட்டிகளின் சமூகமாதலால் அவற்றில் ஏதாவது ஒருபாகம் இற்று சமுத்திரத்தில் விழுமானால் அதுவிழும் அதிர்ச்சியினால் சுமார் நூறு மைலுக்கு அப்புறமிருக்கும் யாதொரு மரக்கலமும் திடீரென்று அலைகளினால் மொத்துண்டு உடைந்தாவது கவிழ்ந்தாவது போய்விடும். பர்வதரூபம்போல் ஓங்கியுள்ள பனிக்கட்டிகள் வெகுசாய்ச் சுத்த ஜலம் இறுகியதனால் உண்டானவைகளாம். இன்னும் ஒருவகையான பனிக்கட்டிகள் உண்டு. அவை பர்வதாகாரமாக மேலெழுந்துவளராமல் அனேகமைல் தூரம்வரையில் நாற்

புறமும் பாளம் பாளங்களாய்ப் பரவிப் பெருங்கட்டுமரங்கள்போல் சமுத்திரத்தில் மிதந்துகொண்டேபோகும். இந்த வகையான பனிக்கட்டிகள் பெரும்பாலும் சமுத்திரத்திலுள்ள உவர்நீர் இறுகியதனால் உண்டானவைகளாம். மேலே பர்வதாகாரமாயிருக்கத்தக்க பனிக்கட்டிகளைவிட, கட்டுமரங்கள் போலிருக்கும் இப்பனிக்கட்டிகளுக்கு மாலுமிகள் கர்ப்பங்கலங்குவார்கள். ஏனெனில், பர்வதாகாரமான பனிக்கட்டிகளைத் தூரத்தில் கண்டமாத்திரத்தில் அவர்கள் மரக்கலங்களை ஒதுக்கி வேறே மார்க்கமாகக் கொண்டுபோய்விடக்கூடும்; நீர்மட்டமாயிருக்கும் இவைகளோ மாலுமிகளின் கண்ணுக்குப் புலப்படாமல் ஜலத்தின்ரூபமாகவே தோன்றி மரக்கலத்தை வந்து நாற்புறமும் இட்டிக்கொள்ளும். இவற்றிற்கு இடையில் அகப்பட்டுக்கொண்ட மரக்கலம் அப்பனிக்கட்டிகள் ஒன்றோடொன்று குளிர்ச்சியின் மிகுதியினால் இறுக இறுக நசுங்குண்டு முறிந்து தவிடுபொடியாய்விடும். அப்போது அதிலுள்ள ஜனங்களெல்லாம் அன்னமாகாரமின்றிக் கட்டுமரங்களைப்போலிருக்கும் அப்பனிக்கட்டிகளின்மீது நிற்கவேண்டிவரும். இந்தப்படி அவர்கள் நின்றுகொண்டேயிருக்கையில் சீதளம் சற்றே குறைந்து உஷ்ணம் கொஞ்சம் மிகுந்த உடனே கட்டுமரம்போல் தாங்கிக்கொண்டிருந்த பனிப்பாளங்கள் தம் நிஜசொரூபமாகிய ஜலரூபமாய் அந்தஜனங்களையும் ஒரு நொடியில் தமக்குள் ஐக்கியமாக்கிக்கொள்ளும்.

பர்வதரூபங்களாயிருக்கும் பனிக்கட்டிகள் வெவ்வேறு திசைகளிலிருந்து சமுத்திரத்தில் மிதந்துகொண்டேவந்து ஒன்றோடொன்று தாக்கும்போது உண்டாகும் பெருத்த சப்தத்துக்கு உலகத்தில் மற்றெந்த ஒலியையும் நிகராகச்சொல்வது முடியாது. சமீபத்திலுள்ள தேசங்களிலிருக்கும் ஜனங்கள் காது செவிடுபட்டுப் பிரமையடைந்து விடுவார்கள். பலஹீனர்களாயிருக்கும் சிலர் இறந்தும் போவதுண்டு. கோடையிடிமுழக்கத்தையும் அதன் பேரொலிக்கு ஒப்பிடுதல் - சிங்ககர்ச்சனைக்குப் பூனைக்கூச்சலை உவமித்தலேயே நிகர்க்கும். பர்வதாகாரமான இப்பனிக்கட்டிகளைத் தூரத்திலிருந்து பார்த்தால் அவைகள் உன்னதமான எழுநிலை மாடமாளிகை கூட கோபுரங்கள் போலவும், இரதகஜதுரகபதாதிகளாகிய நால்வகைச்சைன்னியங்கள் போலவும், புலி ஒட்டக முதலிய விலங்குகள் போலவும் பற்பல வர்ணபேதங்களுடன் விளங்கித்தோன்றும்.

(Arctic Ocean) உத்தரதுருவ மகாசமுத்திரமும் (Antarctic Ocean) தட்சண துருவமகாசமுத்திரமும் மேற்கண்டவாறு சதா பனிக்கட்டியினால் நிறைந்துகிடக்கின்றபடியினால் அங்கு மரக்கலங்களைச் செலுத்திக்கொண்டுபோக மாலுமிகளுக்குச் சாத்தியமாவதில்லை. பூமியைச்சுற்றிலும் யாத்திரை செய்யவேண்டுமென்று புறப்படுவோர்களெல்லாம் கிழக்காகவாவது மேற்காகவாவது மரக்கலங்களைச் செலுத்திக்கொண்டுபோவார்களேயன்றி வடக்காகவாகிலும் தெற்காக

வாகிலும் போகத்துணிவதில்லை. அங்ஙனம் அவர்கள் போவதற்குச் சாத்தியமாயிருக்குமானால் இன்னும் என்னென்னவிசித்திரங்கள் புலப்படுமோ அறிகிலம். பனிக்கட்டிகள் பாளம்பாளங்களாகவும் உண்டை உண்டைகளாகவும் அனேகமைல்விஸ்திரணம் வரையில் கட்டுமரங்களைப்போல் மிதக்கப்பெற்ற சமுத்திரபாகங்களையே பூர்வீக இந்துக்கள் அலங்காரமாய் (தநி) தயிர் சமுத்திரம் என்று கூறியிருக்கலாம். இதுபோலவே இப்போது உலகத்தில் கண்டுபிடிக்கப்பட்டதாகவாவது கண்டுபிடிக்கப்படாததாகவாவதுள்ள என்னென்ன சமுத்திரங்களை (க்ஷீர) பாற்சமுத்திரமென்றும், (சர்ப்பி) நெய்சமுத்திரமென்றும், (இட்சு) கரும்பு சமுத்திரமென்றும், (சுரு) தேன் சமுத்திரமென்றும் பூர்வீக இந்துக்கள் உருவகப்படுத்தினர்களோ அது இக்காலத்தவர்களுக்குத் தெரியவில்லை.

ஷேக்ஸ்பியரைப்பற்றிய ஒரு விநோதவிருத்தாந்தம்.

இங்கிலாந்திலே கவிச்சக்கிரவர்த்தி என்று பெயர்பெற்ற ஷேக்ஸ்பியர்என்னும் கவீஸ்வரர் தாம் உலகோபகாரார்த்தமாய்ச் சொற்சுவை பொருட்சுவைபட அளவிறந்த நீதிகளைப்புகட்டி இயற்றிய நாடகங்களுக்குள்ளே ஒன்றின் காப்புடைத்தலைவனாகிய அரசவேஷத்தைத் தாமேபோட்டுக்கொண்டு அனேக பிரபுக்களுக்குமுன் நாடகத்தை நடத்திவருகையில் இங்கிலாந்துதேசத்தை அக்காலத்து அரசுபுரிந்துவந்த எலிஜபத் என்னும் மகாராணியார் ஷேக்ஸ்பியருடைய வரம்பிகந்த கல்வித்திறத்தைப் பலவாறுகக்கேள்வியுற்று அந்நாடகத்தைக்கண்டு களிக்கும்பொருட்டுப் போயிருந்தனர். புறத்தேகொண்ட இராஜகோலத்துக்கேற்றபடி ஷேக்ஸ்பியருக்கு மனதிலும் இராஜகெம்பீரத்வம் இருக்கிறதா இல்லையா என்னும்சந்தேகம் மகாராணியாருக்கு உண்டாயிற்று. அப்போது இராஜவேஷங்கொண்ட ஷேக்ஸ்பியர் இராஜகெம்பீரத்தோடு, ஏவலாளிவேஷங்கொண்ட ஒருவனை அந்நாடகச்சரித்திரசம்பந்தமான சில குற்றேவல்களைச் செய்யும்படி கட்டளையிட்டனுப்புகிற சந்தர்ப்பமாயிருந்தது. அச்சமயத்தில் மகாராணியார் தமது கரத்திலிருந்த கைக்குட்டை அகஸ்மாத்தாய் நழுவிவிழ்வதுபோல நடித்து ஷேக்ஸ்பியருக்குச் சமீபமாய் விழும்படிவிட்டார். அந்தப்படி நழுவிவிழ்ந்த கைக்குட்டையை உடனே எடுத்து மகாராணியாரிடத்தில் கொடாவிடில் மகாராணியாரிடத்தில் காட்டவேண்டிய இராஜவிஸ்வாசத்தைக் குடிகளில் ஒருவராகிய ஷேக்ஸ்பியர் காட்டாது அவமதித்ததாக எண்ணப்படுவார். உடனே குனிந்து அக்குட்டையை எடுத்துமகாராணியாருக்கு இவர் கொடுப்பாராகில் அந்நாடகத்தில் அப்போது தாம் வகித்திருந்த இராஜகெம்பீரத்துக்குத் தாழ்வு சம்பவிக்கும். ஆகவே அச்சமயத்து ஷேக்ஸ்பியர் இருதலைக்கொள்ளி எறும்புபோ

லாயினர். ஆயினும் அவரது அகன்ற கல்வித்திறமும் நிகரற்ற புத்திகோசாமும் அப்போது அவருக்குக் கைகொடுத்தன. தான் கட்டளையிட்டுக்கொண்டிருந்த ஏவலாளியைநோக்கி,

எங்கட்டளையை யியற்றுதன்முன்னென்
தங்கைகைக்குட்டையைத் தாந்தியாதெடு.

என்று கை நீட்டுதலும், ஏவலாளி அக்குட்டையை எடுத்துத் தன்கரத்தில் கொடுக்க அதைவாங்கி ஷேக்ஸ்பியர் மகாராணியாரை நோக்கி, தங்காய்! இதோ, உன்கைக்குட்டை என்றுசொல்லி இராஜகெம்பீரத்துடன் கொடுத்துவிட்டனர். இதைக்கண்ட பிரபுக்களும் மகாராணியாரும் சவாஸ்! சவாஸ்! என்று கரகோஷ்டம் செய்து கவீஸ்வரரை மெச்சிக்கொண்டாடினூர்கள். ஷேக்ஸ்பியர் அத்தருணத்தில் தம் தங்கையென்று மகாராணியாரிடத்து முறைபாராட்டியது யாவரும் அதிசயிக்கற்பாலது.

சமாச்சாரம்.

தோட்டாற்சிணுங்கி.— வயன்ஞதேசத்தில் சில தினங்களுக்குமுன் நடந்தேறிய புஷ்பக்காட்சியில் ஓர்விததொட்டாற்சிணுங்கியிருந்தது. ஸ்பரிசித்தமாத்திரத்தில் அது அசைவற்று இலைகளை மூடிக்கொள்ளுகிறது. அதில் பெருங்காற்றுமழைக்கும் பூமிஅதிர்ச்சிக்கும் குறிகள் தெளிவாய்த்தோன்றுகின்றன. எதிர்காலத்திய ஆபத்துகளை முன்னறிவிக்கும் கருவிகளாகப் பல்வகைப் பூண்டுகளையும்நமக்குப் படைத்துவைத்த கடவுளின் கருணையே கருணை!

இலங்கையில் கல்வி அபிவிருத்தி.—யாதொரு பிதாவாவது சவரட்சகராவது தம்முடைய வசத்திலிருக்கும் குழந்தையைக் குறைந்தது எழுவயதுமுதல் பதின்மூன்றுவயதுக்குள்ளாகக் கல்விச்சாலைக்கு அனுப்பி அதைக்கல்வி பயில்விக்காவிடில் அந்தப்படி பயில்விக்காத மாதம் ஒன்றுக்கு ஒவ்வொ[illegible]ழந்தைக்காகவும் ஐந்து ரூபாய்க்கு மேற்படாமல் அப்பிதா அல்லது ச[illegible]சகருக்கு அபராதம் விதிக்கப்படுமென்று இலங்கைத்துரைத்தனத்தார் சட்டம் ஏற்படுத்தியிருக்கிறார்கள். நமதுதேசத்திலுள்ள சில வெளிகிராமத்தவர்களும் செல்வர்களும் தம் சிறுவர்களைச் சுயபாஷையையேனுங் கற்கவொட்டாமல் கேவலம் பாமரர்களாகவே வைத்துக்கொண்டு வருகிறபடியால் இங்கும் அத்தகைய சட்டம் ஏற்படுவது எவ்வளவு உசிதமானது!

மரண தெண்டனை—கொலை செய்து மரணதெண்டனைக்கு உள்ளாகத்தக்கவர்களைத் தூக்குபோடுவதென்னும் இப்போதைய செய்கை கொலையாளிக்கு நெடுநேரம் வரையில் துன்பத்தைத்தரத்தக்கதாயிருக்கிறதென்றும், மின்சாரத்தைக்கொண்டு இலேசாய்க் கொலையாளிக்குப் பிராணஹானியை விளைவிப்பது உத்தமமென்றும் அபிப்பிராயப்பட்டு நியூயார்க் என்னும் தேசத்துக் கவர்னர் ஒரு சட்டம் ஏற்படுத்தியிருக்கிறார். அது அடுத்த ஜனவரி மாதம் முதற்கொண்டு வழங்கத்தொடங்குமாம்.

Printed at the Albinion Press,—Madras.

MAHAMAHOPADHYAYA
Dr. U.V. SWAMINATHA IYER LIBRARY